# ஆரம்பக் கல்வி

உ

ரு-௰

௧

டிஸம், ஜனவரி,
1934 1935

JL
T15ஏ211,N33
N35-2.9-10
190335

1231

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

OFFICE OF ...
10 JUN 193
MADRAS

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கடவுள் வணக்கம் | .... | 193 |
| மானேஜர்கள் மகாநாடு | .... | 194 |
| செய்நன்றி யறிதல் | .... | 196 |
| உதய குமாரன் | .... | 200 |
| அமெரிக்காவில் கல்வி | .... | 206 |
| தலைவர் பேருரை | .... | 209 |
| வைணவ சமயம் | .... | 219 |
| வரவேற்புத்தலைவர் பேருரை | | 225 |




72
J15ை21,N33
N35·2·9-10
190339

வரு. சந்தா ரூ. 1 இதழ் 9, 10. தனிப்பிரதி விலை அணா 1½

# தமிழ்க் கடல் பிரசுரங்கள்

| | | அ. | பை |
|---|---|---|---|
| 1 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - I | 2 | 6 |
| 2 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - II | 3 | 6 |
| 3 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - III | 4 | 0 |
| | குட்டிக் கதைகள் - முதற் புத்தகம் | 2 | 0 |
| 4 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - IV | 5 | 0 |
| | குட்டிக் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| | ஆகாய விமானம் | 2 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| 5 வகுப்பு : | ஆரம்ப வாசகம் - V | 6 | 0 |
| | குட்டிக் கதைகள் - மூன்றாம் புத்தகம் | 4 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| | பெரிய உலகத்துச் சிறிய பிள்ளைகள் | 5 | 0 |
| I பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - முதற் புத்தகம் | 7 | 0 |
| | சிறுவர் கதைகள் - முதற் புத்தகம் | 3 | 0 |
| II பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - இரண்டாம் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| III பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - மூன்றாம் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - மூன்றாம் புத்தகம் | 4 | 0 |
| | உடல் நலம் | 4 | 6 |
| IV பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - நான்காம் புத்தகம் | 10 | 0 |
| | லண்டன் மாநகரம் | 6 | 0 |
| Iv பாரம் - | மேல் நாட்டுப் பேரறிஞர் | 10 | 0 |

**தமிழ்க் கடல் ஆபீஸ்**

சாந்தோம் - மயிலை, சென்னை


உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி


சென்னை மாகாணத்திலுள்ள ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர் : பி. வீரராகவன்
(ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்)


" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" —திருவள்ளுவர்.


மலர் - 2. } 1934-35ஹ டிசம்பர், ஜனவரி. { இதழ்-9,10


## கடவுள் வணக்கம்

கல்லாத அறிவுமேற் கேளாத கேள்வியுங்
கருணைசிறி தேது மில்லாக்
காட்சியும் கொலைகளவு கட்காமம் மாட்சியாக்
காதலித் திடுநெஞ் சமும்
பொல்லாத பொய்ம்மொழியும் அல்லாது நன்மைகள்
பொருந்துகுணம் ஏதும் அறியேன்
புருஷர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருஷார்த்தம் ஏது மில்லேன்
எல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
கெவ்வண்ணம் உய்வண் ணமோ
இருளையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறும்
எனக்குநின் னருள்தா ரகம்
வல்லானெ னும்பெய ருனக்குள்ள தேயிந்த
வஞ்சகனை யாள நினையாய்
மந்த்ர குரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

# ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு.

**சென்ற** டிஸம்பர் 26-ம் தேதி முதல் 29-ம் தேதி வரையில், சென்னையில் ஆரம்பக் கல்வித் திருவிழா எனவே சொல்லலாம். ஏனெனில் 20 ம் தேதியன்று திரு. ஸி. ஆர். நமசிவாய முதலியார் அவர்களால் கூட்டப்பட்ட ஆரம்பக் கல்வி போர்ட் கூட்டமொன்று நடைபெற்றது. 27-ம்தேதி சென்னை மகாண ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்கள் மகாநாடு முதல் தடவையாக பச்சையப்பன் கலாசாலையில் கூடிற்று. 28-29-ம் தேதிகளில் மாகாண ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு செவ்வனே கூடி சிறப்பாக நடைப்பெற்றது. இம்மாதிரி தொடர்ச்சியாக ஆரம்பக் கல்விச் சம்பந்தப்பட்ட பல கூட்டங்கள் ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் இதுபரியந்தம் கூடினதே கிடையாது. இது ஆரம்ப கல்விக்கு ஓர் அதிர்ஷ்ட்டம் போலும்.

இந்த இரண்டு மகாநாட்டின் தலைவர்கள் பேருரைகளையும் வரவேற்புக் கமிட்டித் தலைவர்களின் பேருரைகளையும், ஆரம்பக் கல்வியில் சம்மந்தப்பட்ட ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டியதாகும். இவ்வுரைகளில் தற்காலத்தில் ஆரம்பக் கல்வியிலுள்ள குறைகளை நன்றாய் விளக்கிக்காட்டி, தயை தாட்சண்யம் இல்லாமல், அரசாங்கம், கல்வியதிகாரிகள் முதலியோர் செய்து வரும் சில சட்ட திட்டங்களைக் கண்டித்தும், நமது நாட்டில் கல்வியபிவிருத்தி யடையவேண்டிய பல வழிகளையும், நன்றாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். உதாரணமாக திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் சாம்பியன் திட்டத்தைக் கண்டித்து, அதனால் வரும் கேட்டை நன்றாக அரசாங்கத்தின் செவி புகுமாறு பேசியிருக்கிறார்.

தற்போது பல கூட்டங்களையும், மகாநாடுகளையும், கூட்டி ஆரம்பக் கல்வி யுலகில், ஓர் கிளர்ச்சியை உண்டாக்க அடிப்படையாக நின்று வேலை செய்தது ஆசிரிய மானேஜர்கள் என்பதில் ஐயமில்லை. இதைப்போல் ஆசிரிய மானேஜர்கள் பிரதி வருடம்

190339



தங்கள் மகாநாட்டை ஒழுங்காக கூட்டியிருப்பார்களானால் இந்தச் சாம்பியன் திட்டம் தலைகாட்டியிராது. கிராண்டுகள் வருடா வருடம் இவ்வளவு குறைந்திருக்காது. ஆசிரிய மானேஜர்கள் இதுகாறும் பல வழிகளிலும் முன்னேற்றமடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமுண்டோ. நிமிடத்திற்கு நிமிடம் மாறிக்கொண்டிருக்கும் தற்கால நவ நாகரீக உலகத்தில் ஆசிரிய மானேஜர்கள் பண்டைக் காலத்தைப்போல், கல்வியதிகாரிகளையும் கல்வியதிகாரிகள் அரசாங்கத்தையும், எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் ஒரு காரியமும் நடவாது, அதிகார முறையில் ஒரு சமயம் அவ்விதம் ஒருவருக்கொருவர் எதிர்பார்க்கலாமே யல்லாது, பணமின்றிவரும் பொழுது தங்கள் தங்கள் நோய்க்கு தாங்களேதான் வைத்தியம் செய்துக்கொள்ள வேண்டும். பாடசாலை மானேஜர்களுக்கு கிராண்டுக் குறைவோ, ஆசிரியர்களுக்கு சம்பளக் குறைவோ ஏற்பட்டால், கல்வியதிகாரிகள் என்ன செய்ய முடியும். உதாரணமாக கடந்த 5, 6 வருடங்களில் பாடசாலை கிராண்டுத்துகை ரூ 58 லக்ஷத்திலிருந்து ரூ 51-லக்ஷமாக குறைந்து விட்டது. இதைப்பற்றி எமக்குத்தெரிந்தமட்டில் கடந்த ஒவ்வொரு வருடமும் டைரக்டர் துரையவர்கள் கிராண்டுத் துகையை குறைந்தது 4-5-லக்ஷமாவது அதிகப்படுத்த வேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு எழுதியவண்ணமாயிருக்கின்றார். அதற்கு அரசாங்கத்தார் சில சாக்கு போக்குகளைச் சொல்லி கண்ணைத் துடைத்து வருகிறார்கள். டைரக்டருக்கும் பக்கபலமில்லாமல் சரியென ஒப்புக்கொள்ள வேண்டியவராயிருக்கின்றார். இச்சமயங்களில் நாம் இத்தகைய மகாநாடுகளைக் கூட்டி பல எம். எல். ஸி. சட்டசபை அங்கத்தினர்களை வரவழைத்து சட்டசபையில் நமது சார்பாக வாதாட ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நமது காரியம் பலிக்குமேயொழிய டைரக்டரை நம்பிக்கொண்டு பழி பாவத்தை அவர் தலைமீது சூட்டிவிட்டு நாம் வீட்டில் நிம்மதியாக உட்கார்ந்திருந்தால் டைரக்டரும் ஓகோ சரி சரி ஊரெல்லாம் மகாநாடு மயமாயிருக்கையில் ஆசிரிய மானேஜர்களுக்கு அதிக கஷ்டங்கள் இல்லைபோலிருக்கிறது, சந்தடியே காணோம், நாம் எதற்கு இவர்களுக்காக அரசாங்கத்தோடு மறுபடியும் போராட வேண்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாமென ஒரு சமயம் சோர்வடையக் கூடும்.

# செய் நன்றியறிதல்

(சோமசுந்தரம், கமாலியா முஸ்லீம் பாடசாலை.)

(183-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி உபகாரத்தை எதிர்பாராவண்ணம் நாம் நன்றி செய்ய வேண்டும் என்பது பின்வரும் செய்யுளால் நன்கு விளங்கும்.

"கதிரவன் புவிநிறை காரிருள் நீக்கலென்
மாஞ்செடி கொடிகளும் மலர்களும் மன்னுயிர்க்கு
உரிய காலங்களில் உறுபயன் இவதென்
மாங்குயில் முதலிய தீங்குற் பறவைகள்
நம் செவிக்கின்பம் நல்குவ தேனோ"

நமது சுக துக்கங்களனைத்தும் தமது சுகதுக்கங்களாகவும் அதற்கு மேலாகவும் பாவித்து நம்மிடத்தினின்றும், பிரதி உபகாரம் ஒன்றையும் எதிர்பாராவண்ணம் நம்மைப்போற்றி வளர்த்த தாய் தந்தையர்களிடத்தில் நாம் எவ்வளவு பக்தி விசுவாசம் அன்பு உள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

"சின்ன ஓர் பொருள் தந்தோரைக்
சீவன் உள்ளளவும் உள்ளத்துன்னவே வேண்டும்
என்ன உரைத்தனர் பெரியோர் தேகம்
தன்னை மேலாம் தரணியின் வாழ்வைத்தந்த
அன்னை தந்தைக்குச் செய்யும் அருங்கைமாறுளதோ
அம்மா."

---

ஆதலின் இனியாவது தலைவர் திரு. ஏ, இராமசாமி முதலியார் அவர்கள் சொல்லியதுபோல், தங்கள் மாகாண சங்கத்தை நன்றாக சட்ட திட்டங்களுடன், பல ஜில்லா சங்கங்களையும் இணைத்துக்கொண்டு, ஒவ்வொரு வருடமும் ஜில்லாக்கள்தோறும், மகாநாடுகளைக் கூட்டி ஒழுங்காக தங்கள் மாகாண சங்கத்தை விருத்தி செய்து வருவார்களானால் அவர்கள்கொண்ட காரியங்கள் அனைத்தும் எளிதில் கைகூடுமென்பதில் ஐயமில்லை.



நமது தற்காலத்து வாலிபர்களிற் சிலர் தமது மாதாபிதாக்களிடம் பயபக்தி விசுவாசமின்றி செய்நன்றி கொன்றோராய் மீளா நரகிற்காளாகி வருவது எவ்வள்வு பரிதபிக்கத் தக்கது. நாம் நமது முதியோர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ளுகிறோமோ அவ்வாறுதான் நம் மக்களாகியார் நம்மிடம் நடந்து கொள்ளுவார்கள். இவ்விஷயத்தை ஒருவன் மனைவி சொற்கேட்டு மயங்கிய மனத்தனாகி தன் வயது முதிர்ந்து, பிதாவைச் சிறிதும் மதியாது அப்பிதாவின் முதுமைப்பருவத் தோற்றத்தை, கண்டு அருவருத்து தன்னுடன் வைத்துப் போஜனம் செய்யவும் சகியாமல் ஒரு ஒடு கொடுத்து குடித்து ஒதுங்கியிருக்கச் செய்தான். கைப்பொருளனைத்தும் புத்திரனுக்களித்து கைகால் வலிமைகுன்றி காதறி விழுந்து, கண்ணொளி குறைந்து, வாயொலி மழுங்கித் தள்ளாடியிருக்கும் கிழவன் (சொற்களைக் கேட்டுக் கொண்டு) ஏதுசெய்வான். அந்தோ பரிதாபம் கொடிய புத்திரனது கொடுஞ் சொற்களைக் கேட்டுக் கொண்டு வெட்கத்தையும் விடுத்து, வயிற்றுக் கஞ்சியையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இங்ஙனமிருக்கையில் இக்கொடிய புத்திரனுடைய புத்திரனொருவன் இவ்வநீதியைக் கண்டு மனம் சகியாதவனாகி,மனம் புழுங்கி,எப்படியாவது தன் பாட்டனுக்கு கஷ்ட நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் தந்தைக்குப் புத்தி கற்பிக்க வேண்டும் எனவும் நினைத்தான். ஒரு நாள் பாட்டனது உண்கலமாகிய மண் கலத்தை எடுத்து ஒளித்து வைத்துவிட்டான். போஜன காலத்தில் கிழவன் ஓட்டைத் தேடினான். வைத்த இடத்தில் காணாது வருந்தினன். மகனும் மருகியும் யாது கூறுவார்களோ எனப் பயந்தான். இதற்குள் மகன் வந்து ஏ, கிழவா ஓட்டை எடுத்துவந்து கஞ்சி வாங்கிக்கொள்ளக் கூடத் தீரவில்லையா, சீக்கிரம் வந்தாலொழியக் கஞ்சி கிடையாது என்று அதட்டினான். இடியேறுண்ட நாகம்போல் நடுங்கி கிழவன் வந்து அப்பா ஓடு களவுபோய்விட்டது என்றான். தேடிப்பார்த்தான். அகப்படவில்லை என்றான். அப்போது மகன் தந்தையை நோக்கி கிழட்டுச் சனியனுக்கு தினம் ஒரு ஓட்டுக்கு யார் அழுகிறது பத்திரமாக வைத்துக் கொள்ள கேடென்னவென்று வெடுவெடுத்துக்கூறி அடிக்கச்சென்றான். அவ்வேளையில் அவன் மகன் ஓடி வந்து தந்தையைநோக்கி அப்பா அடியாதே அவ்வோட்டை

நானே எடுத்துவைத்திருக்கிறேன் என்றான். அடே நீ எதற்காக எடுத்தாய் என்று கேட்டான். அப்போது மகன் அப்பா சமீபத்தில் நீயும் கிழவனாகிவிடுவாய் அப்போது உனக்கு ஓர் ஓடு தேடிக் கொடுக்கவேண்டும், ஆதலின் இப்போதே எடுத்து வைத்திருக்கிறேன் என்றான். அது கேட்டவுடன் அடே பயலே எனக்கும் ஓர் ஓடு கொடுக்கப்போகிறாயா என்று அடித்தான். சிறுவன் சிறிதும் அஞ்சாது ஏனப்பா கோபித்துக்கொள்ளுகிறாய், நீ உன் பிதாவை எவ்வாறு பரிபாலிக்கிறாயோ அவ்வாறு தானே உன் பிள்ளையாகிய நான் உன்னைப் பரிபாலிப்பேன் இதில் நீ வருந்தவும் கோபிக்கவும் நியாயமில்லையே என்று அஞ்சாது கூறினன். அது முதற்கொண்டு தன் தந்தையினிடத்தில் வெகு மரியாதையுடன் நடந்துகொண்டான்.

இன்னும் இதனடியில் குறிப்பிட்டிருக்கும் கதையால் செய்நன்றி மறக்கலாகாது என்பது நன்கு புலப்படும்; பாரத யுத்தம் ஆரம்பிப்பதற்கு சிலநாட்களுக்கு முன் குந்திதேவியானவள் கிருஷ்ணனுடைய தூர்ப்போதனைக்கிணங்கி தன் மகனாகிய கர்னனிடம் சென்று,

வருக என்மதலாய் இளைஞர் ஐவரும் நின் மலரடி
 அன்பினால் வணங்கி
உரிமையால் மனம் ஒத்து ஏவலே புரிய
 ஒருதனிச் செய்யகோல் ஓச்சி
அரசெல்லாம் வந்து உன் கடைத் தலைவணங்க
 ஆண்மையும் செல்வமும் விளங்கக்
குருகுலாதிபர்க்கும் குரிசிலாய் வாழ்வு,
 கூர்வதே கடன் எனக் குறித்தாள்.

அப்பொழுது கர்ணன்.

பெற்ற நீர் மகமேலன் பிலாமையோ
 அன்றிப் பெரும்பழி நாணியோ விடுத்தீர்
அற்றை நாள் தொடங்கி என்னை இயன்றளவும்
 ஆருயிர்துணை எனக்கருதி
கொற்றமா மகுடம் புனைந்து அரசளித்துக்
 கூடவுண்டு



உரிய தம்பியரும் சுற்ற மானவரும்
 என்னடி வணங்கத்
தோற்றமும் ஏற்றமும் அளித்தான்.
இன்னான் எனை அறியான் என்னை முடிகவித்து,
 மன்னர் வணங்க அரசளித்துப் பின்னையுமே
தன் எச்சில்தான் உண்ணுந் தான்மையன்
 என் அன்னாய் என் எச்சில் உண்டான் இனிது
மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான் இழுப்ப
 அற்று விழுந்து அருமணிகள் மற்றவற்றைக்
கோக்கோ பொருக்குகோ என்றேனுக்
 கென்னுயிரை போக்கேனோ வஞ்சமரிற் புக்கு"

இச்செய்யுள்களினால் செய் நன்றியை மறக்கலாகாது. என்பது நன்கு விளங்கும்.

# உதய குமாரன்

## வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்

### ஓர் இனிய தமிழ் நாடகம்

(முன் தொடர்ச்சி)

### ஜெயகேசரி வர்மன் சபை

கேசரி : என் வேண்டுகோட் கிரங்கி மன்னவர் யாவரும் வந்திருக்கின்றனர். என்றாலும் விதர்ப்பகோன் ஏதோ அசந்தர்ப்பத்தால் தான் வாராது சேனைத் தலைவரை அனுப்பியிருக்கின்றான் ஏதும் அவரை விசாரித்தாலே தெரியும்.

சேனைத் : மன்னனைக் கொலைபுரிந்தவனும். அம் மன்னன் மைந்தனைக் கொல்லமுயன்றவனும், அம்மைந்தன் அன்னையையும் பின்னர் மனைவியையும் கற்பழிக்கவெண்ணிய பாதகன் முகத்தைப் பார்க்கவொண்ணாதென என்னை யனுப்பி அச் சண்டாளனைக் கொன்று, அவன் நாட்டை வீரவர்மர் ஏக புத்திரனை சீவோதயன் எனப் பெயர் புனைந்த வென்னை முறைப்படி கைக்கொண்டு வரும்படி யனுப்பிவைத்தார். அப்பா! நீ தானோ எம் மாருயிர் மன்னர் வீரவர்மர் திருக்குமாரன், இப் பாதகன் அரசைக் கவர்ந்த நாள்முதல் இதுவரைக்கும் இவனியற்றிவரும் தீய கருமங்களால் குடிகள் பெரிதும் வருந்தி வாடுகின்றனர். இதுகாறும் எனக்கஞ்சியன்றோ சும்மாவிருக்கின்றனர். இவ்விடமே இப் பாதகனைக் கொன்று நினக்கு முடி சூட்டிவைக்கின்றேன்.

துஷ்டத் : அடா! துரோகி! என் ஊழியத்திருந்து எனக்கே வைரியாய் முடிந்தனையே. இதோ அந்த சீவோதயனையும் உன்னையும் கொல்லுகின்றேன். (எழுந்து கத்தியை உருவுதல்.)

சீவோதயன் : (எழுந்து கத்தியைப் பிடுங்கிவிடுதல்) இப்பொழுது உன்னால் என்னவாகும். (தளையிடுதல்.)

மேகலை : அப்பா! என் அருமைமைந்தா! நீ யன்றோ நின் தந்தையார்க்கேற்ற புத்திரன். இப்பொழுதன்றோ என் விரதமும் முற்றுப் பெற்றது. நின்னைப் பெற்றதொன்றறிவேனே யொழிய இதுவரைக்கும் மற்றதொன்றறியேன் (என்று தழுவிக் கொள்ளுதல்.)



சீவோதயன் : (அன்னைபாதம் படிந்தெழுந்து) ஆருயிர் அன்னாய்! என் பொருட்டு இத்தனைகாலம் பட்ட கஷ்டங்களுக்கு மிகவும் விசனிக்கிறேன்.

பதுமுகன் : நண்ப! நீஇறந்துபட்டாயென்று நின்னைப் பெற்ற அன்னையும், இதுகாறும் வளர்த்து வந்ததாய் தந்தையர்களும் நின்னாயகியும், யானும், தணல்புகவிருந்தோம். தெய்வகதியாய் நின்னைச் சிறைப்படுத்திய கொடியர்களுள் ஒருவராலன்றோ நின் உண்மை புலப்பட்டது. அவராலன்றோ விந்த ஆநந்தக் காக்ஷிக்குப் பாத்திராயினம். எல்லாம் சிவன் செயலே.

சீவோதயன் : அப்படியா. எல்லாம் அவன் செயலே. சீக்கிரமே அந்தப்புரஞ் சென்று என் அன்பார்ந்த நாயகியையும், வளர் தாய் தந்தையரையும் காணவேண்டும். ஐயா வீரசேனரே. தாங்களே நம் நாட்டிற்கு அழைத்துச் சென்று என் தந்தையைக்கொன்ற விடத்தே இவனை நிறுத்திச் சிரச் சேதம் செய்து, மயானம் வாழ்ருத்திரி சந்நிதானத்திற்கு முன்னர் அவன் சிரத்தையாவரும் காணும்படி நிறுத்திவையும். சீக்கிரம் செல்வீர்.

வீரசேனர் : வீரவர்மர் தவ பயனே! நின் கட்டளைப்படியே இப் பாதகனை அழைத்துச் சென்று கடவுளருளால் நடந்த சம்பவங்களை யெல்லாம் குடிகளுக்குத் தெரிவித்து அவர்களுக்கும் எனக்கும் உள்ள சீற்றம் தணியுமாறு என் கை வாளுக்கே யிரையிடுகின்றேன். நான் சென்று இது சம்பவத்தை என் சேனைக்கு அறிவித்து வருகின்றேன். நீரும் சென்று உம் காரியங்கள் யாவற்றையும் கவனித்துவாரும். இப்பாதகன் இவ்விடமே இருக்கட்டும்.

எல்லாரும் : மிகவும் நன்று நன்று. இப்பாதகனைக் கொன்று வீர வீரவர்மர் திருக்குமாரனுக்கே முடி சூட்டுவித்தல் வேண்டும். (யாவரும் போய்விடுதல்.)

A

துஷ்டத் : (தனியே சிந்தித்தல்.) ஆ! தெய்வமே எனக்கு இப்படிப்பட்ட கேடுவருமென்று நினைத்திலனே. எனக்குப் பகைவன் என் ஊரிலேயே வளர்ந்து வருகிறான் என்பதை நான் முன்னமே அறிந்திருந்தால் நானே என் கைவாளுக் கிறையாக்கியிருப்பேனே. நேற்று கங்குலிற்கண்ட கனவை யாவது யோசித்து இவ்விடம் வாராது நின்றேனோ. பாவி வீரசேனனும் இப்படிப் படுமோசம் செய்வானென்று எண்ணிலனே. இனி எப்படியும் வீரவர்மன் மாண்டவிடத்திலேயே நாமும் மாளவேண்டியதே. ஆ! தெய்வமே! இக் கேட்டையும் எனக்கு விதிப்பையோ. கொடிது கொடிது.

சேவகன் : அடா முண்டமே! ஏது என்னென்னவோ உளறுகின்றாய். எங்கள் ராஜா மருமகப்பிள்ளை கொல்வதற்கு முந்தியே நாங்கள் கொன்றுபோடுவோம். அடா பாவி எங்கள் ராஜா சம்மந்தியைக் கொன்றதல்லாது மருமகப்பிள்ளையையும் கொல்லவா பார்த்தாய் தடியா (என்று ஓர் குத்து விடுதல்.)

துஷ்டத் : ஆ! தெய்வமே! என் காலமா. உயிரிருந்தும் உயிரற்ற பிணம்போலிருக்கின்றேனே. இப்பாவிகள் நம்மை யடிக்கவும் ஏசவுமா நான் பிறந்தேன்.

2-வது சேவகன் : என்னடா என்னடா சொன்னாய் மற்றொரு குத்து விடுதல்.

துஷ்டத் : அப்பா! நான் உங்களை ஒன்றும் சொல்லவில்லை என் காலத்தைச் சொன்னேன்.

1 வது சேவகன் : காலத்தானடா உன்னை உதைத்தது இன்னும் உதைக்கிறது பார் (என்று உதைத்தல்)

2 வது சேவகன் : அடே முனியா நாம் ராஜா ராணி எல்லாம் அவங்க மருமகப்பிள்ளை ஊருக்குப் போய்விட்டாங்களாம். நம்பளே இந்தக் கழுதையே இட்டுக்குனு வாச் சொன்னாங்களாம். வா போவோம். (போய்விடுதல்)

## பட்டாபிஷேக மண்டபம்

சீவோதயன், சயிந்தை, ஜெயகேசரிவர்மர், விசயை, பதுமுகன், வீரசேனர் யாவரும் சபையில் வீற்றிருத்தல். இரண்டு



சேவகர்கள் துஷ்டத்தும்மனை விலங்கிட்டு சபையில் கொண்டுவந்து நிறுத்துதல்.

சீவோதயன் : இந்திரசேனாா! இப்பாதகன் கொட்டம் குன்றியது. இவனை இப்பொழுதே யழைத்துச் சென்று என் தந்தையர் மடிந்த விடத்திலேயே இவனைக் கொல்லுதல்வேண்டும்.

சேவகன் : மன்னர் பெரும! ஓர் தலைச் சிரேட்டர் நம் சபை வாயிலில் வந்திருக்கின்றார் அவர் நும்மைக் காணவேண்டுமாம்.

சீவோதயன் : இவ்விடம் வரவிடு (போய்விடுதல்) ,

சந்நியாசி : பிரவேசம்-வாழ்த்துதல்.

சீவோதயன் : ஆசனத் தமர்ந்தருளவேண்டும்.

சந்நியாசி : அமர்தல், தங்களுக்கின்று திருமுடி சூட்டும் மகோற்சவம் இன்றென வறிந்து இவண் வரலாயினேன். இச்சமயத்தில் நும்மால் எனக்கோர் காரியமாகவேண்டியிருக்கின்றது அதற்கு நான் விரும்பியபடி வாக்களிக்க சித்தமுண்டோ.

சீவோதயன் : தவப்பெருந் தகையே! நும்போன்ற மகான்களுக்கு என்போன்ற எளியோனால் என்னசெய்ய வியலும், தேவரீர் திருவுளத் திருப்பது எளியோனால் செய்யத்தக்கதாக விருந்தால் என்னுயிரைக் கொடுத்தாயினும் பூர்த்தி செய்துவைக்கின்றேன்- திருவுளம்செய்தல்வேண்டும்.

சந்நியாசி : அகப்பற்று, புறப்பற்று என்னும் பாசத்தனையைச் சேதித்திருக்கும் நின்னாலாக வேண்டியது என்னவுள்ளது ஒன்றுமின்று. யான் நின்னை நோக்கி நிற்பதும் நின் நன்மையைக் கருதியதேயாகும்.

சீவோதயன் : தவராஜா! என் நன்மையைக் கருதிய தெனின் முக்காலும் தம் விருப்பின்படி நடப்பது சத்தியம் சத்தியம்.

சந்நியாசி : ஆயின் மிகவும் நன்று. நீ இன்று நல்லதோர் முகூர்த்தத்தில் திருமுடி புனைந்து உலகம் மெச்சுமாறு அரசாளப் புகுவதால் அதற்கு முன்னர் ஓர் பாதகமும் புரியேல். அக்காலத்து நினக்கு உயிர்ப்பகைவனாயினும் நன்மையே புரிவை. நல்லாக்கினியான் நினக்கென்றும் துணைபுரிவான். நின் அன்னையார்க்கும் தந்தையார்க்கும் நினக்கும் பொல்லா தீங்கிழைத்த

பாதகனைச் சிறைவிடுத்து உயிர்ப்பிச்சையீர்ந்து நின் நாட்டினின்று துரத்திவிடுவாய்.

சீவோதயன் : பெருங் கருணைக்கடலே ! தம் விருப்பிற்கு மாறில்லை. கட்டளைப்படியே அப் பாதகனை மன்னித்து விடுவித்து விட்டேன். ஐயா! வீரசேனரே பெரியவர்விருப்பின்படி அவனுக்கிடப்பட்ட தளையைச் சேதித்துச் சிறையை விடுத்து நம் நாட்டினின்று ஓட்டிவிடும்.

வீரசேனர் : கட்டளைப்படிக்கே செய்கின்றேன். யாரடா சேவகன் இவனை அழைத்துச் சென்று தளையை முறித்துச் சிறை விடுத்து நம் நாட்டினின்று துரத்திவிடுங்கள்.

சேவகன் : கட்டளைப்படியே. (துஷ்டத்தும்மனை அழைத்துச் செல்லுதல்.)

சந்நியாசி : தன் வேடத்தைக் களைந்து பெண்ணுருவத்தோடு நின்றல்.

சீவோதயன் : என்ன ஆச்சர்யம். துஷ்டத்தும்மன் குமாரத்தியும் நமது நன்பன் பதுமுகன் மனைவியையும்போல் தோற்றுகின்றது.

காந்திமதி : அரசர்க்கரசே! தாங்கள் கருதியவண்ணமே துஷ்டத்தும்மன் குமாரத்தியும் தங்கள் நண்பர் மனைவியும் நானே. எனது நாயகர் தேவரீர் பொருட்டு என்னிடம் ஏதும் உரையாது சென்றதும், நானும் தவவேடம்பூண்டு எத்திசையும் அவரைத் தேடிக் காணாது கருத்தழிந்து முடிவாக்கை நேற்றைப்போது என் பிராணநாதரும், தேவரீர் முதலியயாவரும் இவ்விடம் வந்திருப்பதாகவறிந்து இவண் இன்று வந்தேன்.

பதுமுகன்:(தழுவிக்கொண்டு) என் காதற்கினிய நாயகி! இப்பொழுதன்றோ என் வாழ்வு சிறப்புற்றது. துஷ்டன் புத்திரியாகிய நின்னையும் துஷ்டையாய் இருப்பாயன்றல்லவோ இறையுங் கருதாது சென்றேன். இன்றே நின் மனவேற்றத்தைக் கண்டேன். இனி நின்னைப் பிரியேன். பிரியினும் ஆற்றேன்.

சீவோதயன் : பதுமுக! நின் தவப்பயனே பயன். நின் நாயகியே நாயகி. அம்மங்கையின் கற்பின் திரமே திரம். நத்தை வயிற்றில் முத்து பிறந்தாலென்ன. துஷ்டன் வயிற்றில் சிரேஷ்டை



பிறந்தான். நாயகன்மீதிருந்த வாஞ்சையோடல்லாது தந்தை மீதிருந்த அன்பும் வியக்கத்தக்கதே. நின் மனைவியின் மதி வன்மையே வன்மை.

வீரசேனர் : காந்திமதியே மங்கையர்க் கரசியாவள். அவள் கற்பே கற்பு. அம்மணி பெண்மணி இனி நீயும் உன் நாதனும் இவ்விடம் இன்புற்று வாழ்ந்திருப்பீர்.

விசையை : அப்பா மகனே! நின் அன்னையார் இறந்தது முதல் இதுவரைக்கும் நீ இப் பதவிக்கு வருமாறு காலையும் மாலையும் எப்பொழுதும் கடவுளைத் துதித்து வந்தேன் என விருப்பம் முடிவுபெற்றது. இனியான் எனக்கிருக்கும் சிறிது காலத்தை வீணாக்காது அவன் திருத்தாளைத் தொழுது முத்திப் பெரும் மார்க்கம் தேடல் வேண்டும் என விருப்புக்குத் தடை கூறாது உத்தரவு கொடுத்தல் வேண்டும்.

சீவோதயன் : அன்னாய்! நும் விருப்பிற்குத் தடை யேதுமில்லையென்றாலும், என்னிடத்தேயிருந்து காலத்தைக் கழிக்கவொண்ணாதோ. இதுகாறும் கான வாழ்ந்துபட்ட கஷ்டங்கள் போதாதோ. இனியாயினும் சுகமாக வாழ்வீர்.

விசையை : என் அருமை மைந்தா! கானிடம் வாழ்வதே எனக்கு மிகவும் இன்பமானது. அவ்விடமே அவனை யுன்னுதற்கேற்ற நல்லிடம். நான் எவ்விட மிருந்தாலென்ன? நீ இவ்விடம் இருந்து முறைப்படி அரசுசெலுத்திப் புத்திரமித்திரர்களோடு இன்புற்று வாழ்வாய்.

வீரசேனர் : அம்மா ! தபோத்தமியே! நுமது திருகரத்தினாலேயே நும் புத்திரர்க்குத் திருமுடி சூட்டுதல் வேண்டும்.

விசையை : கடவுளைத் தொழுது சீவோதயனுக்கு முடிசூட்டுதல் வந்தவர் யாவரும் வாழ்த்துதல்.

மங்களம்.

# அமெரிக்காவில்
# கல்வி கற்பிக்கும் முறை.

(முத்து கிருஷ்ணன் — சென்னை)

அமெரிக்கர் தங்கள் வரிவசூலிலிருந்து வரும் பணத்தினால் பாடசாலைகளை நடத்தும் முறையில்கிடைத்த நன்மைகளுக்கு, அமெரிக்கா ஒரு சிறந்த உதாரணமாக விளங்குகிறது. முன்பு பல துறைகளிலும் சிறுவர்களுக்கு போதித்துவந்த கலாசாலைகள் மிகவும் சிறந்து விளங்கின. ஆனால் இப்பொழுது, பொது ஜன அபிப்பிராய வேறுபாடுகளினால், எண்ணிக்கையில் மிகவும் குறைந்துவிட்டன. ஆகையால், இப்பொழுது, கிரேட் பிரிட்டன் முதலிய நாடுகள் அனுபவிக்கும் துன்பங்களினின்றும், அமெரிக்கா விடுபட்டிருக்கின்றது, என்று சொல்லலாம். கல்வியைக்குறித்து அமெரிக்கர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள், நாம் ஆராய்வதற்கு சிறந்த விஷயங்களாயிருக்கின்றன. அமெரிக்காவில் கல்வியைக் கற்பிக்கும் முறை மிகவும் பெரிதாய் இருக்கின்றது. அமெரிக்காவில் சுமார் 12-கோடி ஜனங்கள் வசிக்கின்றனர். எலிமெண்டரி பாடசாலைகள் சுமார் 2-லக்ஷத்து 38-ஆயிரம். அவைகளில் சுமார் 2-கோடியே 10-லக்ஷம் மாணவர்கள் படிக்கின்றனர் உயர்தரப் பாடசாலைகள் 24000. அவைகளில் படிக்கும் மாணவர் 45-லக்ஷம். எலிமெண்டரி பாடசாலைகளில் 6-லக்ஷத்து 40-ஆயிரம் உபாத்தியாயர்களும், உயர்தர பாடசாலைகளில் 2,13,000. உபாத்தியாயர்களும் இருக்கின்றனர். ஆனால் பிரிட்டனில் 27 கோடி மக்கள் இருந்தும், 2-லக்ஷம் 'பிரைமரி' பாடசாலைகளும், 1-கோடி சிறுவர்களும் மட்டுமே இருக்கின்றனர். எலிமெண்டரி பாடசாலைகளும், உயர்தர பாடசாலைகளும் சேர்ந்து எண்ணிக்கையில் 14000-மும் மாணவர்கள் 2,300,000-மட்டுமே. அமெரிக்காவில், 'பெடரல்' ஸ்டேட்ஸிலிருந்து வசூலிக்கும் வரிகளும் மொத்த வரும்படியும் சேர்ந்து, மொத்தத்தொகையில் 100-க்கு இப்பாடசாலைகளுக்கு கொடுக்கப்படுகின்றன. ஐக்கிய மாகாணங்களில் வரிவசூலிப்பில் 7 இக்கலாசாலைகளின் சொத்து. அரசாங்கத்தாரே கல்வி போதிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். 'பெடரல்' கவர்



மெண்டார் ஆராய்ச்சி சாலைகளும், பயிற்தொழில் கலாசாலைகளுக்கும் திரவிய உதவிசெய்து வருகின்றனர். ஆதலால் அமெரிக்கக் கல்வியில் பல விதமான ரகங்கள் இருக்கவேண்டுமென்பது வெள்ளிடைமலை. உதாரணமாக 6-வயது முதல் 12-வயது வரையில் சிறுவர்கள் படிக்கும் காட்டாயக் கல்வி போதகசாலைகள் வருஷத்திற்கு வருஷம் மாறிவருகிறது. ஆயினும் அமரிக்காவில் எங்கும் ஒரே மாதிரி கல்வி கற்பித்தலுக்கு சில காரணங்கள் உள.

"ஆயினும் இவ்வளவு திருப்திகரமான விஷயங்கள் அமெரிக்கக் கல்வியில் இருந்தும் சில மிகவும் அபாயமான தவறுகள் இருக்கின்றன" வென்று 'லண்டன் டைம்ஸ்' என்ற பத்திரிகையில் ஒருவர் எழுதுகிறார். கல்வி கற்பிக்கும் முறையின் சிறப்பு மிகவும் பெரியதாய் கருதுவதுகூடாது. கிரேட் பிரிட்டனில் 'டோரி' கட்சியார், வரிகொடுப்பவர்கள் தரும் பணத்திற்குத் தகுந்த நன்மைகள் பெறுவதில்லை என்று முறையிடுகிறார்கள். இக்குறை அமெரிக்காவில் இன்னும் அதிகமாக இருக்கின்றது. அமெரிக்காவில் ஒவ்வொரு வகுப்பிலும் அதிகமாக மாணவர் இருப்பதால், மாணவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும், இருக்கும் சம்பந்தம் மிகவும் அற்றுப்போகிறது. எல்லாருக்கும் சரியாக கல்வி போதிக்க. உபாத்தியாயர்கள் அசக்தராயிருக்கின்றனர். உபாத்தியாயர்களும் நன்று கல்விகற்காதவர்களாயிருக்கின்றனர். உபாத்தியாயர்களில் முக்கால் பாகம் மாதர்களாய் இருப்பது சரியா, என்பது சந்தேகமாயிருக்கிறது. முதல் மூன்று வகுப்புகளில் அவர்களைப்போல் சிறுவர்களை நடத்துவதற்கு யாராலும் சாத்தியமாகாதெனினும், இவ்வழக்கம் மிகவும் அபாயகரமானது. மாதர் உபாத்தியாயர்கள் அதிகமாக இருப்பது, பிரிட்டிஷ் மக்களுக்கு ஒரு பொருளாய் தோன்றவில்லை. ஆனால் அமெரிக்க அபிப்பிராயமோ, பிரிட்டிஷ் அபிப்பிராயத்தைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டிருக்கின்றது. மிகவும் கெட்டிக்காரர்களான மாணவர்கள், சாதாரண மாணவர்களிடமிருந்து தனியாய் பாதுகாக்கப்படுகின்றனர். சாதாரண மாணவர்களின் சக்தியைக்காட்டிலும், அவர்களின் சக்தி அதிகமாக இருப்பதால் அவர்களை மிகவும் உற்சாகப்படுத்தி முன்னுக்கு கொண்டுவருகிறார்கள். இது ஒரு கவனிக்கத்தகுந்த விஷயம் மாணவர்கள் தங்கள் போக்கின்படி கல்வியின் வெவ்வேறு பகுதி

களை தேர்ந்தெடுக்காமல், தங்களுடைய சக்திகளை தாங்களே கண்டுபிடித்து அதற்குத் தகுதியான பகுதியை தேர்ந்தெடுக்கிறார்கள். இதுவும் ஒரு சிறந்த முறையே. எலிமெண்டரி பாடசாலைகள் ஒவ்வொரு மாணவரின் சக்தியையும் கண்டுபிடித்து அதற்குத் தகுதியான கல்வியை அவனுக்கு கற்பிக்கிறார்கள். இதனைத் 'ஸெகண்டரி' பாடசாலைகளில் கல்வி பெறுவதற்கு மிகவும் நல்லதாயிருக்கிறது.

சென்ற இதழில் ரஷ்யாவின் கல்விமுறையைப்பற்றி இப்பத்திரிகையைப்பற்றி இருந்ததைக் கண்டு, ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு நாட்டின் கல்வியைப்பற்றி எழுத முன்வரலானேன். ஆகையால் இவ்விதழிலும் அமரிக்காவின் கல்வி முறையைப்பற்றி எழுதலானேன். அடுத்த இதழில் ஜப்பான் கல்வியைப்பற்றி எழுத முன்வந்துள்ளேன்.

# சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் நான்காவது மகாநாடு

## 28-12-34

## தலைவர் பேருரை

சீமான்களே, சீமாட்டிகளே,

இம் மகாநாட்டைக் கூட்டினவர்கள், என்னை இதற்குத்தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டபொழுது நான் பலவகையிலும் ஆழ்ந்து யோசித்துத்தான் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டேன். அவ்வாறு யோசித்ததற்குக் காரணம் கடந்த நான்கு வருடங்களாகக் கல்வி யுலகத்தில் நடந்த பல தொடர்ச்சியான முறைகளை நெருங்கி அறியாமல் விட்டிருந்ததே யாகும். மற்றொன்று இந்நாளில் வித்தியா அதிகாரிகள் ஏற்படுத்தியிருக்கும் பல கல்வி முறைகளையும், அவைகளை அமுலுக்குக் கொண்டுவரும் சீர்திருத்தங்களையும் அவர்களோடு கலந்து பார்க்க அவகாசம் எனக்கு ஏற்படாமையால் இம்மகாநாட்டிற்குத் தலைமைவகிக்க எண்ணங்கொண்டிலேன். அவ்வாறு அதிகாரிகள் செய்த ஏற்பாடுகளை உத்தியோக தோரணையில் பார்க்க எவ்விதத்தில் அவை நியாயமென்று எனக்கு விளங்கவில்லை. அல்லது இவ்வித சீர்திருத்தங்களை ஏற்பாடு செய்ததற்கு, ஓரளவு பொதுஜன அபிப்பிராயமாவது அதிகாரிகளுக்குச் சாதகமாயிருப்பதாயும் தெரியவில்லை. ஆதலின் இவ்வித சீர்திருத்தங்களை ஏற்பாடுசெய்த அதிகாரிகளின் மனப்பான்மையை அறிந்தவாவது . இக் காலத்திற்கு வேண்டிய முக்கிய சீர்திருத்தங்களை அறிந்தவாவது இத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டிருப்பின் எனக்குத் திருப்திகரமாயிருக்கும்.

ஆனால் சென்னை ஜில்லாக் கல்விச் சபையில் யான் சில காலம் தலைமைவகித்து இருந்தமையால், ஆரம்ப பாடசாலை நிலைகளை — அதிலும் ஆசிரிய மானேஜர்களால் நடத்தப்படும் பாடசாலை நிலைகளை — முக்கியமாக அறிந்திருக்கின்றேன். ஆகையால் இம் மகாநாட்டைக் கூட்டுவித்தவர்கள் கேட்டுக் கொண்டவாறே இதனை முன்னின்று நடத்தும் கடமையை மேற்கொண்டேன் இன்று கல்வி உலகம் ஒரே கொதிப்பான நிலையில் இருக்கின்

றது. நமது நாட்டை எதிர்த்து நிற்கும் நெருக்கடியான பொருளாதார நிலையும், படித்தவர்களுக்கும் வேலையில்லாத் திண்டாட்டமும் நமதுமக்களின் சுகவாழ்க்கையை முழுதும் நிலைகுலையச் செய்துவிட்டன. ஆகவே மக்களுக்கு ஒருகால்த்தில் உயர்தரப் படிப்பின் மீதும், சர்வகலாசாலைப் படிப்பின்மீதும் இருந்த ஆர்வம் குறைந்துவிட்டது. இத்தகைய விஷயங்களைப்பற்றிப் பலர் பலவாறாகப் பொதுமக்களுக்குப் புத்திகூற முன்வந்தார்களே அல்லாது எவரும் இவைகளுக்கு முடிவிட்டுச் சரியான வழிவகைகளைக் காட்டினார்களில்லை. அவ்வகைய வேண்டப்படாத யோசனை சொல்பவர்களுடன் யானும் ஒருவனாக இருக்க எண்ணிலேன். படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி ஆலோசிக்கவும் அதற்கு வேண்டிய வழிகளை எடுத்துக்கொள்ளவும் சர்வகலாசாலைத் தலைவர்களுக்கும், பட்டதாரிகளுக்கு நற்புத்தி கூறும் அறிஞர்களுக்கும் விட்டுவிடுகின்றேன்.

இந்த மகாநாட்டில் சில எளிமையான கொள்கைகளை நாம் கவனிக்கவேண்டுவது அவசியம். அக்கொள்கைகள் எளியனவாக இருந்தபோதிலும் அவைகள் நமது தேச முன்னேற்றத்திற்கு அதிக முக்கியமானவைகளேயாகும். ஆரம்ப வித்தையை இனி நடத்திக்காட்டவேண்டிய முறைகள், பொது ஜனங்களுக்குள்ளே ஆங்காங்கே பரவச்செய்யவேண்டிய கட்டாயப்படிப்பு, இவற்றை நடத்திவரும் தனித்தனியானசங்கங்கள் ஒன்றுகூடிச் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் ஆகிய இவற்றை இம்மகாநாட்டில் கவனிப்பதே முக்கிய நோக்கமாகும்.

இத் தேச மக்களின் கல்வி யபிவிருத்தியின் காரணமாகப் பல கஷ்ட நஷ்டங்களுடன் வெகு நாட்களாக உழைத்துவரும் பாதிரிமார்களை (Missionaries) ஆரம்பக் கல்வி அபிவிருத்தியில் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் புகழ்ந்து போற்றி வருகின்றார்கள்.

இந்த இராஜதானியிலும் சரி, அல்லது நமது இந்தியாவிலுள்ள வேறு இராஜதானியிலும் சரி, கல்வியை மக்களுக்கு ஓரளவு வளர்த்து வருவது மிஷனரி சங்கங்களே என்பதை ஒவ்வொருவரும் நன்குணர்தல் வேண்டும். உத்தியோகஸ்தர்களின் ஆதரவையும் எதிர்பாராது அவர்கள் பெருந் தொகையான பொருள்களைச்செலவு செய்தும், பலவகையான கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டும்



நமது நாட்டு மக்களுக்குள் கல்வியைப் பரப்பி வருகிறார்கள். இங்குக் கூடியுள்ள நீங்கள் அனைவரும் இப்பாதிரிகளுக்கு உமது நன்றி யறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளீர்கள். இவர்கள் பொது மக்களாலாவது அதிகாரிகளாலாவது கவனிக்கப்படாமல் நமது நாட்டின் கல்விக்கு நலம் செய்ய முற்பட்டிருக்கின்றனர். இன்று மாலை அக்கூட்டத்தினர்களைப்பற்றியே முக்கியமாகச் சில விஷயங்களைச் சொல்லுதல்வேண்டும். ஏனெனில் அவர்கள் தொன்றுதொட்டுக் கல்விக்காகச் செய்துவரும் ஊழியம் போதுமான அளவுகவனிக்கப்படவில்லை. அன்றியும் அவர்களது பிற்கால வாழ்க்கை அனியாயமாக அச்சமுறும் நிலைக்கு வந்திருக்கிறது.

ஆசிரிய மானேஜர்கள் ஆங்காங்கே திண்ணைப் பள்ளிக்கூடங்களையும், சிறு பாடசாலைகளையும் வைத்துக் கல்வியை உண்மை நிலையில் விருத்தி செய்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் துரைத்தனப் பொருளுதவியை நாடுவதில்லை. துரைத்தனத்தாரிடம் சொற்ப ஊதியத்தைப் பெறும் ஆசிரியர்களும், அவர்கள் எற்படுத்தும் சட்டதிட்டங்களுக்கு அடங்கி ஒடுங்கி யிருந்து, தணிக்கைபார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்குக் கீழ்ப்பட்டுப் பாடசாலைகளை நடத்தவேண்டியவர்களா யிருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் செய்யும் வேலை ஓரளவு சுய நலமற்றதென்று சொல்ல முன்வரவில்லை. பெருந்தொகையான பொருளைச் செலவுசெய்து பாடசாலைகளை நிறுவி ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்குக் கல்வியை யூட்டி ஒரு பலனையும் எதிர்பாராது உழைத்துவரும் தர்மகர்த்தர்களென்றும், தியாகிகளென்றும் இவர்களை நான் எக்காலத்தும் சொல்லவில்லை.

ஊன்றிப் பார்க்குமிடத்து உதவிபெறும் ஒவ்வொரு பாடசாலையும், ஒவ்வொரு நோக்கங்களையும், எண்ணங்களையும் காரணங்களையும் கொண்டதாகவே யிருக்கும். உபாத்தியாயர்கள் தங்கள் வயிற்றை வளர்க்க வேண்டுவது முக்கிய மல்லவா? ஆகையினால் எவ்வளவோ ஆபத்தான சந்தர்ப்பங்களிலெல்லாம் இவர்கள் தலைகொடுத்துத் தங்கள் பாடசாலைகளைப் போக்கடிக்காமல் நடத்தி வருவதல்லாது தீவிரமாகப் பலவித கிளர்ச்சியையும் செய்து வருகிறார்கள். இவ்விதம் யான் சொல்லும்

பொழுது ஆசிரிய மானேஜர்களைத் தாழ்வாகச் சொல்லி இழிவு படுத்துகிறேனென்று எண்ணாமலிருக்க வேண்டுகின்றேன்.

ஆசிரிய மானேஜர்களால் நடத்தப்படும் பாடசாலைகளில் சிலவேனும் சிறந்த நோக்கத்துடன் மிகவும் திறமையாக நடத்தப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆசிரிய மானேஜர்களைப்போல் பாடசாலைகளில் சிறந்த ஊக்கத்துடன் கல்வி போதிக்கும் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் துரைத்தனப் பாடசாலைகளிலும், போர்டு பாடசாலைகளிலும் முனிசிபல் பாடசாலைகளிலும் ஒரு சிலரே இருப்பதைக் காண்கின்றோம். பாடசாலைகளில் சம்பளம் வாங்கத் தொடங்கின பிறகு ஆசிரிய மானேஜர்கள் தங்கள் சௌக்கியங்களைப் பெரும்பாலும் இழக்கவேண்டியவராகிறார்கள். பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கும் நேரமல்லாது ஒழிந்த நேரங்களில் பாடசாலைகளைப்பற்றிச் சிந்திக்கவே இடமில்லாதவர்களாகிறார்கள்.

பாடசாலைகளின் தொகைக் கணக்கை ஆராய்ந்து பார்ப்பின் மிஷனரி பாடசாலை தவிர நமது இராஜதானியில் கல்வியின் முன்னேற்றத்திற்கு உதவிபெறும் பாடசாலைகள் அதிலும் ஆசிரிய மானேஜர்களுடைய பாடசாலைகள் மிகுதியாக உழைத்திருக்கின்றன என்பது நன்கு விளங்கும். இக்காலத்து ஆசிரிய மானேஜர்களுக்கு ஏற்பட்டுள்ள துரதிர்ஷ்டமான நாட்களையும் அவர்கள் நிலையைக் காத்துக்கொள்ள முயலும் வழியையும் மற்றையோர் ஐயமுறுவதைக் காணக் கவலையுறுகின்றேன். நமது நாட்டு ஆரம்பக்கல்வி அபிவிருத்தியில் ஆசிரிய மானேஜர்கள் செய்துவரும் தொண்டை யெடுத்துக் காட்டி அவ்விதம் அரசாங்கத்தினிடத்திலும் சிலபொது மக்களிடத்திலும் ஆசிரிய மானேஜர்கள் பால் உள்ள ஐய நோக்கத்தை மாற்றுவதற்கும், ஆசிரிய மானேஜர்கள் ஆரம்பக் கல்வி அபிவிருத்தியில் பொது மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் செய்யவேண்டிய தங்கள் கடமை யின்னவென்பதைத் தெளிவுறக்காட்டுவதற்கும் இம் மகாநாடு கூட்டப்பட்டதாகும்.

ஆசிரிய மானேஜர்கள் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கு உடன்பட்டுப் பல வருத்தங்களில் ஆழ்ந்து துன்புறுவதைக் காண வருந்துகின்றேன். இதற்கு வித்தியா அதிகாரிகளின் தயாள சிந்தை யில்லாமையே காரணமாயினும், முக்கியமாகச் சில



ஆசிரிய மானேஜர்கள் அவர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய வகை தெரியாமையால் அது பிறரையும் துன்புறுத்துகின்றதென்பதைத் தெரிவிக்கப் பெரிதும் வருந்துகின்றேன். இந்த முக்கியமான விஷயத்தை ஆசிரிய மானேஜர்கள் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டுகிறேன். தங்களைச் சரிவரச் சீர்திருத்திக்கொண்டு ஒரு சங்கமாகச் சேர்த்து வேலை செய்யாததே ஆசிரிய மானேஜர்கள் இப் பரிதாபகரமான நிலையில் இருப்பதற்குக் காரணம். ஆங்காங்கு ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக ஜில்லா அதிகாரிகளைப் பேட்டி காணக் காத்திருப்பதை நான் அடிக்கடி பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றேன். ஆனால் எல்லா ஜில்லாச் சங்கங்களும் ஒன்றுசேர்ந்து மாகாண சங்கமொன்று நிறுவி, அதில் மாகாண முழுதுமுள்ள ஆசிரிய மானேஜர்களைப்பற்றி அரசாங்கத்தாருக்கு ஆதாரத்துடன் எடுத்துப் பேசவல்லதும் விஷயங்களைப் பாரபட்சமில்லாமல் பார்க்கவல்லதும் ஓரிடத்தில் ஓர் உபாத்தியாயருக்குள்ள குறைவு நிறைவுகளைப்பற்றியே கூறிக்கொண்டிராமல், பொது விஷயங்களைப்பற்றிப் பேசவல்லதும் ஆகிய ஒரு சங்கம் முயற்சி யொன்றும் செய்வதாகக் காணப்படவில்லை. அத்தகைய சங்கத்தை நிறுவிக்கத் தீர்மானித்து அது ஆரம்ப சூரத்துவம் உள்ளதாக இராமல் எப்பொழுதும் விழிப்புள்ளதாகவேயிருந்து தன் கடமைகளைச் செவ்வனே செய்யவல்லதாக இருக்கும்படி பார்ப்பீர்களென்றும் நான் நம்புகின்றேன்.

நான் முன்பு சொல்லியதுபோல், உங்களுக்குத் தோன்றும் சில கொள்கைகளைப்பற்றிச் சொல்ல விரும்புகின்றேன். பாடசாலைகளை ஒன்று சேர்த்துத் தொகைப்படுத்தி நடத்தும் திட்டத்தைக் கடந்த நான்கு வருடங்களாகப் பலர் பலவிதமாக விவாதித்துக் கண்டித்து வருகிறார்களே தவிர, கல்வி சம்பந்தப்பட்ட எந்தச்சங்கமோ இப்புதியதிட்டத்தை ஆதரித்ததாகத்தெரியவில்லை. இப்புதிய திட்டத்தில் பல வகைப்பட்ட குறைபாடுகளும், குற்றங்களும் மலிந்து கிடக்கின்றன. ஒருவகையில் இல்லாவிட்டாலும் மற்றொரு வகையில் ஆரம்பக் கல்வியைப் பாதிக்கவே செய்கின்றது. ஜில்லாக் கல்விச் சபைகளும், கேதோலிக் பிராடாஸ்டன்ட் முதலிய மிஷனரி சங்கங்களும், ஆசிரிய மானேஜர்களின் சங்கங்களும், இப்புது திட்டத்தைக் கண்டித்து இப்புது திட்டத்தினால் ஆரம்பக் கல்

விக்குக் கெடுதி விளையுமே யொழிய நன்மை எவ்வகையிலும் உண்டாகாதென்பதைப் பலவகையிலும் அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டியிருக்கின்றன. இவ்வளவு எதிர்பாராத எதிர்ப்பையுடைய இத்திட்டத்தை அதிகாரிகள் பிரியமில்லாத பாடசாலைகளின்மீது வற்புறுத்தி, இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதை விடுத்து அதிகாரிகள் ஒரு மகாநாட்டைக்கூட்டி இத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட பல சங்கங்களில் பிரதிநிதிகளை வரவழைத்து, இத்திட்டத்தை நன்றாக எல்லோரும் சேர்ந்து விவாதித்து உண்மையில் இதனால் நன்மை யிருப்பின் அதிகாரிகள் இதை அமுலுக்குக் கொண்டுவரவோ, அல்லது பிரதிநிதிகள் நினைக்கும் வண்ணம் ஆரம்பக்கல்விக்குப் பாதகமிருப்பின் இத்திட்டத்தை அடியோடு விட்டுவிடவோ முயலவேண்டும். இப்போது நான் சொல்லுவதெல்லாம் கல்வியுலகில் முன் நடந்த பழைய சீர்திருத்தங்களே என்பதை எனது நண்பர் கல்வி மந்திரியவர்களுக்கு நான் ஞாபகமூட்டுகின்றேன்.

எக்காரணத்திலோ உத்தியோக தோரணையின் அதிகாரத்தால் இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவார்களானால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் ஆசிரிய மானேஜர்களே யென்பதில் ஐயமில்லை. மிஷன் பாடசாலை மானேஜர்கள் தங்களைப் பல சங்கங்களின் மூலமாகச் சீர்திருத்திக் கட்டுப்பாடுடன் வேலை செய்து வருகிறார்களாதலின், அதிகாரிகள் தங்கள் பாடசாலைகளைப் பாதிக்கா வண்ணம் செய்துகொள்ள அவர்களுக்கு வல்லமை யேற்பட்டிருக்கின்றது இந்தப்புதியதிட்டம் அமுலுக்கு வந்தாலும், மிஷன் பாடசாலைகளுக்கு இதனால் யாதொரு குறைவும் ஏற்படா வண்ணம் அதிகாரிகளின் அனுகூலங்களை அடையுமென்பதில் சந்தேகமில்லை. எப்படியாயினும் இத்திட்டம் அமுலுக்கு வரின் ஓரளவு இந்த மிஷன் பாடசாலையும் பாதிக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால் உங்கள் நிலையே மிகவும் பரிதாபப் படத்தக்கதாகும்

உங்கள் ஜில்லாச் சங்கங்கள் ஒழுங்காக அமைக்கப்படவில்லை அரசாங்கத்திற்கு உங்கள் அபிப்பிராயத்தைப் பலமாகத் தெரிவிக்கும்முறையில் ஒரு சமயம் அரசாங்கம் இப்பாடசாலைகளைச்சேர்த்து நடத்தும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரின், உங்கள் நிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்குச் சற்று முன்பு நான்சொல்லியது



போல் உங்கள் மாகாண சங்கத்தைப் பலமாகவும், ஒழுங்காகவும் அமைக்கப்படவேண்டும்.

இப்போது பேசிவரும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்கிற காரணங்களைச் சில நிமிஷங்கள் நாம் ஆராய்வோம் இப் புதிய திட்டத்தினால் ஆரம்ப பாடசாலைகளின் பொருட்டு வீணாகச் செலவாகும் பணத்தைச் சிக்கனப்படுத்தலாமென்றும், பாடசாலைகளில் நன்றாகத் திறமையுடன் கல்வியபிவிருத்தியாகுமென்றும் சொல்லுகிறார்கள். இவ்வளவுக்கும் காரணமாயுள்ளது "வீண்செலவு!" என்னும் ஒரு வார்த்தைதான். 1927-ம் வருஷம் ஆரம்பக் கல்வியில் அனாவசியமாகப் பணம் வீணாக்கப்படுகிறதென்பதைப் புதுமையாக ஒரு கல்வியதிகாரி கண்டு பிடித்தார். அவர் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் முதல் வகுப்பில் வாசிக்க 100-க்கு 5 பேர்களே 5-வது வகுப்பிற்குப் போகிறார்களெனக்குறிப்பிட்டார் இதைத்தான் அரசாங்கத்தார் பிரசுரம் செய்யும் ரிப்போர்ட்டில் குறித்து இவ்விதம் வீணாக்கப்படும் பணத்தைத் தடுக்கவேண்டுமென்று எழுதியுள்ளார்கள். வீணாக்கப்படும் பணத்தைத் தடுக்கவேண்டுமென்னும் வார்த்தைதான் ஆரம்பக்கல்வி உலகில் வேதவாக்கியமாக மேலும் உச்சரிக்கப்பட்டு வருகின்றது. இதைத்தான் "ஹார்டாக் கமிட்டியாரும் தங்கள் ரிப்போர்ட்டில் காட்டி எழுதியிருக்கின்றார்கள். இதே விஷயம்தான் "சைமன் கமிஷன்" ரிப்போர்ட்டிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது. நமது இந்தியாவிலுள்ள எல்லா இராஜதானியிலும் கல்வியின் அபிவிருத்தியைப்பற்றி எழுதப்படும் ஒவ்வொரு ரிப்போர்ட்டுகளிலும், இது விஷயத்தையேதான் திருப்பித் திருப்பி எழுதியிருக்கிறது. நான் முன்பு எடுத்துக் காட்டியதுபோலப் பாடசாலைகளைச் சேர்த்து நடத்தும் இப்புதிய திட்டத்தின் அடிப்படையான அபிப்பிராயமும் பணம் வீணாக்கப்படுவதைத் தடுக்க வேண்டுமென்பதுதான். அவ்விதம் இப்போது பாடசாலைகளில் பணம் நஷ்டமாவதல்லாமல் நாம் உழைத்துவரும் உழைப்பும் வீணாகிறதென்பதை நான் அறிவேன். ஆனால் இப்போது கொண்டுவந்திருக்கும் திட்டம் இக்குறைபாடுகளை நீக்குமென்று நான் ஒப்புக்கொள்ள முடியாது. இதற்கு மாறாக இப் புதிய திட்டத்தினால் இப்போது பணம் வீணாக்கப்படுவதைக் காட்டிலும்,

ஆரம்பக் கல்வி அபிவிருத்தி அடைவதற்குப் பெரும் பாதகம் என்பதை உறுதியாகக் கூறுவேன்.

முதலாவது இப்போது வீணாக்கப்படுகிறது என்பதின் நோக்கத்துடன் எடுத்த புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபொழுது பெரும்பாலும் உண்மையானதென்று தோன்றவில்லை. இந்த இராஜதானியிலுள்ள உண்மை விஷயங்களை இக் கணக்குகள் நமக்குக் காட்டவில்லை. உதாரணமாக 1929-ம் ஆண்டில் முதல் வகுப்பில் வந்த பிள்ளைகளின் கணக்குகளை எடுத்துக்கொண்டு, இத்துடன் 1933-ம் வருடம் 5-வது வகுப்பில் படிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையை எடுத்து, ஒத்திட்டுப் பார்த்துவிட்டு, உடனே வித்தியாசத்தைக் கண்டுபிடித்து, இவ்வளவு பிள்ளைகள் மேல்வகுப்பிற்குப் போகாததினால் பணம் வீணாக்கப்பட்டதென்று சொல்லிவிடக்கூடாது. முதல் வகுப்பில் படிக்கும் பிள்ளைகளின் வயதாகிலும் தெரிந்திருக்கவேண்டும், அல்லது 5—வது வகுப்புப் பிள்ளைகளின் வயதாவது தெரிந்திருக்க வேண்டும். இந்த இரண்டு விவரங்களும் அகப்படாதபோது புள்ளிக் கணக்குகளில் காட்டியபடி அவ்வளவு தொகை வீணாக்கப்படுகிறதென்று சொல்ல இடமில்லை. அல்லது கட்டாய இலவசப் படிப்பால் இவ் வீண் போக்கைப் பரிகாரம் செய்ய இடமிருக்கிறதென்றுசொல்லமுடியாது. இரண்டாவதாகப் பிள்ளைகளின் பழக்க ஒழுக்கங்களும் ஆரம்பப் பாடசாலைகளில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியும், இவ்விதம் பணம் வீணாக்கப்படுவதற்குத் தடுக்கமுடியாத காரணங்களாகும்.

1920-ம் வருடம் பாடசாலைகளில் வாசிக்கும் பிள்ளைகளுடன் இப்போது வாசிக்கும் பிள்ளைகளை ஒத்திட்டுப் பார்த்தால்தான் நமது இராஜதானியில் மக்களிடத்தில் கல்வி எவ்வளவு பரவியிருக்கிறதென்பது தெளிவாகப் புலப்படும். உதாரணமாக, சர்வ கலாசாலையில் பட்டதாரிகள் சில வருடங்களுக்குப் பிறகு, தாங்கள் கீழ் வகுப்பில் வாசித்த தமது தாய்ப் பாஷையை மறந்து விடுவதும், சில சமயங்களில் ஆங்கிலத்திலேயே ஒரு சிறு சரியான வாக்கியத்தையும் எழுத அசக்தர்களாயிருப்பதையும், நாம் கண்கூடாகப் பார்க்கவில்லையா? இவ்விதம் வீண் செலவைப்பற்றி யான் அதிகம் விவாதித்து வருவதால், இவ்வீண் செலவைத் தடுக்கக்கூடாதென்பது எனது நோக்கமல்ல, படித்தவர்களின் தொகை அதிகப்



படுத்தக்கூடாதென்பதும் எனது நோக்கமல்ல. ஆனால் இப்போது அதிகாரிகள் ஏற்படுத்தும் திட்டம் எவ்வகையிலும் மேற்குறித்த குறைபாடுகளைத் தீர்க்காதென்பதே. உண்மையைக் கூறுமிடத்து கட்டாய இலவசப் படிப்பைச் சரியான முறையில் அமுலுக்குக் கொண்டுவராதவரையில் இந்த வீண்போக்கு எவ்வகையிலும் இருக்கத்தான் செய்யும். இராஜதானியில் எந்தப் பாகத்திலும், ஆரம்பக் கல்விச் சட்டத்தில் சொல்லிய முறையில் கட்டாய இலவசப் படிப்பு ஆரம்பிக்கப்படவேயில்லை. நான் சென்னை ஜில்லாக் கல்விச் சபைதலைவனாக இருந்தபொழுது, அடிக்கடி இந்த விஷயத்தைப் பற்றி எச்சரிக்கை செய்திருக்கின்றேன்.

பிள்ளைகளின் கல்வியின் போக்கை வகுப்புவாரியும், ஒரு பாடசாலையைவிட்டு மற்றொரு பாடசாலைக்குப்போகும் வரையிலும் கவனிக்கப்படவேண்டும். இந்த விஷயத்தில் எய்டெட் பாடசாலைகளுக்கும், கார்ப்பரேஷன் பாடசாலைகளுக்கும் ஒற்றுமை ஏற்படவேண்டும். ஒரு பாடசாலையைவிட்டு மற்றொரு பாடசாலைக்குப் போய்ச் சேரும்பொழுது, பாடசாலை மாறும் சர்ட்டிபிகேட்டில்லாமல் பிள்ளைகளைச் சேர்த்தல் கூடாது. படிப்பைக் கட்டாயப்படுத்தும் விஷயத்தில் அதிகாரிகள் தகுந்த சட்டதிட்டங்களை ஏற்படுத்த வேண்டும். அவ்விதம் அரசாங்கத்தார் கட்டாய இலவசப் படிப்பைப்பற்றித் தகுந்த சட்டதிட்டங்களை ஏற்படுத்தியதனால் அத்திட்டம் அடியோடு புறக்கணிக்கப் பட்டதுடன் இலவசமாகக் கல்வி கற்பிக்கவேண்டும் என்ற ஒரே விஷயம் தான் கவனிக்கப்பட்டது. கட்டாயக் கல்வி அடியோடு அமுலுக்கு வாதது மாத்திரமல்லாமல், கவர்ன்மெண்ட் பாடசாலைகளிலும், போர்ட் பாடசாலைகளிலும் மாத்திரம் இலவசமாகப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொழுது பாடசாலையில் நுழைந்த பிள்ளைகளுக்கு மாத்திரம், இலவசமாகப் படிப்பு சொல்லித்தர வேண்டுமென்கிற அபிப்பிராயம் பரவி வருகிறது. இந்த அபிப்பிராயத்தை முற்றும் நான் ஒத்துக்கொள்ளவில்லை. இந்தவிதமான எண்ணமுடைய இலவசப் படிப்பை ஒத்துக்கொள்வோமானால் ஆரம்பக்கல்வி தீவிரமாகப் பரவ இடமிராதென்று எண்ணுகிறேன். இது பெண் கல்வியை அபிவிருத்தி செய்யாதென்பது தெளிவு. ஏனெனில் ஜன சமூக வகையில் தடைபடும். அதனால் இள வயதிலேயே சீக்கிரத்

இல் பெண் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்க முயல வேண்டும். அப்படித் தவறினால் பெண்கள் படிப்பில் வீண் போக்குப் பலவகையிலும் ஏற்படவேசெய்யவும். அவ்விதம்செய்யமுடியாது. ஏனெனில், தாய் தந்தையர்கள் ஆரம்ப பாடசாலைப் படிப்பு முடியும்வரை தங்கள் பிள்ளைகளை அனுப்பிவைக்கக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். அதற்காகத்தங்கள் பிள்ளைகளைத் தாய் தந்தையர்கள் பாடசாலைக்கு அனுப்பாமலே நிறுத்திவிட எண்ணுவார்கள். இந்த இராஜதானியில்பிள்ளைகளுக்கு எவ்விதம் கல்வி போதிக்கவேண்டுமென்ற விஷயத்தைச் சிற்சில வகைகளில் எடுத்துக் கூறினேன். ஆதலின் நமது குழந்தைகளுக்கு அதிகப்படியான படிப்பைக் கொடுத்து நமதுநாட்டைக் கல்வித் துறையில் முன்னேற்றமடையச் செய்வது உங்களுடைய பொறுப்பென்பதை நீங்கள் உணர்வீர்கள் இம்மாதிரியான பெரிய எண்ணங்கள் உங்கள் மனத்தை உற்சாகப் படுத்தவேண்டும். உங்களை நீங்கள் உயர்த்திக்கொள்ளும் வண்ணம் முயலும் விஷயத்தில் எனது அனுதாபத்தைக் காட்டுகின்றேன். அதோடு நான் இப்போது சொல்லிய பெரிய விஷயங்களை நழுவ விடாமல், உங்கள் தேசமக்கள் உங்களைப் பல வகையிலும் ஆதரிக்கும் வண்ணம், உங்கள் பாடசாலைகளைச் செவ்வனே நடத்தி ஆரம்பக்கல்வியை நமது நாட்டில் தீவிரமாகப் பரவச் செய்வீர்களென்று நம்புகின்றேன். இம்மகாநாடு சிறப்புடன் நன்றாக நடக்குமாறு வாழ்த்துகின்றேன்.

# வைணவ சமயம்

கௌமாரக் குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

இத்தகைய நியாயங்களினால் இரண்டு ஆசாரியர்களும் வேதமும், உபநிஷத்தும் பகவான் வாக்கியமென்று நம்பி அவைகளையே மேற்கோளாகக்கொண்டு தம் மதங்களை ஸ்தாபித்துள்ளார். ஆயினும் அந்த உபநிஷத்துக்களிலேயே பிரம்ஹம், அசித், சித் இவைகளைப்பற்றி ஒன்றுக்கொன்று நேர் விரோதமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

சில இடங்களில் பிரஹ்மம், நிர்க்குணம், குணாஹிதமென்றும் மற்ற இடங்களில் பிரஹ்மம், நித்யன், ஸத்யன், அத்வைதன் விபு, சர்வஞ்ஞன், சர்வசக்தன், ஞானி என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலைமையில் உபநிஷத்துக்கள் ஒன்றும் பொய்யாகாவாகையால் சங்கரர் கொள்கை பிரம்ஹம் நிர்க்குணன் தானென்றும் சில உபநிஷத்தில் குணங்களுடன் கூடியதாகச் சொல்லப்படுவது மாயையுடன் கூடின அபரம் அல்லது கார்ய பிரம்ஹமம் இராமானுஜர் கொள்கை அப்படியல்ல. சத் சித் முதலிய குணவிசேஷங்களையுடையதே பிரஹ்மம். சில உபநிஷக்துக்களில் நிர்க்குணன் என்று சொல்லப்படுவதின் தாத்பரியம் என்னென்றால் பிரம்ஹனுக்கு இழிவான குணங்கள் (அதாவது மாறுதல், இறப்பு, துக்கம் முதலியவை) கிடையா என்பதே. ஜீவகோடிகளிலும் பிரகிருதிலும், பரமாத்மா அந்தர்யாமியாய் நிறைந்துள்ளார். பிரஹ்மனை அறிய முடியாது என்பதின் தாத்பரியம், சங்கரர் கொள்கைப்படி பிரம்ஹனன்றி ஆன்மாவில்லை; அதனால் முடியாதென்பது. இராமானுஜர் கொள்கையோ பிரம்ஹத்தின் ஒப்பற்ற குணங்கள் நம்மனதிற்கும் புத்திக்கும் எட்டாதவைகள். ஆகையினாலே அப் பிரம்ஹத்தை அறியமுடியாது.

(4) இந்த ஜகத்திற்குக் காரணபூதம் பிரம்ஹமமே. வேதாந்திகள் அபிப்பிராயப்படி காரணமும், காரியமும் முடிவிலொன்றே. ஆகை

யால் ஜகத்துக்கும், சிருஷ்டிக்கும் கர்த்தா பிரஹ்மனே; தன்னிடத்திலிருந்தே, அதாவது தானன்றி வேறு பொருளின் உதவியில்லாமலே, அவைகளை சிருஷ்டித்தார். பாண்டங்கள் செய்யும் குயவனும் அவரே, மண்ணும் அவரே, பரிநாமத்தால் மாறுதல் (Modifcation) அடைகிறார்.

இராமானுஜர் கொள்கை யாதெனில் சூக்ஷ்ம நிலையிலுள்ள ப்ரஹ்மன் ஸ்தூலநிலையடைதலே ஜகத்தெனப்படும்; சங்கரர் கொள்கையோ இம்மாறுதல் அதாவது சிருஷ்டி நிஜமல்ல. விவர்த்தம், அவித்யா என்றும் மாயையின் செயல் என்றும் சொல்லுகிறார்.

(5) அவித்யை அல்லது மாயை என்று சங்கரர் சொல்லுவதை ராமானுஜர் முற்றுமே அநேக வாதங்களால் கண்டித்துள்ளார். அவித்யை என்பது பிரம்ஹத்தினின்றும் வேறு என்றால் பிரம்ஹமம் ஒன்றே என்பதற்குப் பழுது உண்டாகும். இரண்டும் ஒன்று என்பது வியர்த்தம். இந்த நிலைமையில் சங்கரர் மாயை நிஜம் பொய் என்று வர்ணிக்க முடியாதென்று முடிவு சொல்லுகிறார்; ஸத், அஸத் நிர்வசம் என்கிறார்.

முக்கியமான அம்சங்களை மேலே யெடுத்துச் சொன்னேன். இன்னும் அநேக முள. இவைகள் ஒவ்வொன்றையும் தனித் தனியே விளக்கிச் சொல்ல ஒரு உபந்நியாஸம் போதாது. ஆகையால் இதை இவ்வளவுடன் நிறுத்துகிறேன்.

## மூன்று முக்கிய அம்சங்கள்.

ராமானுஜ மதத்தின் முக்கிய அம்சங்கள் என்ன? உலகிலுள்ள அநேக மதங்களைக் காட்டிலும் எந்த விஷயங்களில் இந்த மதம் வேறுபட்டு உலகத்தோருக்கு எதை முக்கியமாகக் கற்பிக்கிறது? அப்படிப்பட்ட சாசுவதமான உலகத்துக்கு உபயோகமான ஜீவ தாது போன்ற அம்சங்கள் இருந்தாலொழிய இம்மதம் பாவி நிலை நின்றிருக்கக் காரணமில்லை யல்லவா? எல்லா மதங்களும் மோக்ஷத்தை யடையும் மார்க்கத்தையே போதிக்கின்றன. மோக்ஷமென்றால் விடுதலை; ஹிந்து மதப்படி கர்மத்தினாலுண்டா



கும் சம்சாரபந்தத்தினின்றும் விடுதலை. இம் மோக்ஷத்திற்கு சாதாரணமாக மூன்று பாயங்கள் கூறப்பட்டுள்ளன.

(1) கர்மயோகம்:—நிஷ்காம்யமாய் ஜீவனுக்கு ஏற்பட்ட சர்வ கர்மங்களையும் செய்தல். கீதையில் பகவான் அர்ஜுனனை நோக்கி:- "செய்யவேண்டிய கர்மத்தை எக்காலமும் ஸங்கமற்று (பற்றற்று) செய். கர்மத்தை ஸங்கமற்றுச் செய்யும் புருஷன் பரத்தைப் பெருகின்றான்" என்று கூறியுள்ளதைக் கவனிக்க, பகவத்கீதை 3—19.

(2) ஞானயோகம்:—தகுந்த குருவினிடம் யோகவித்தை, அப்யஸிப்பவனும் மோக்ஷ அர்ஹனாகிறான்.

"காமக்குரோத பயங்களற்றவர்களாயும், என்னைத் தியானிப்பவர்களாயும், என்னை யுபாசித்துக்கொண்டு மிருக்கிற மஹான்கள் ஞானயோகத்தால் பரிசுத்தர்களாய் என் சொரூபத்தை யடைகிறார்கள்" என்று கீதையில் வெளிப்படையாய் பகவான் அருளிச் செய்திருக்கிறார்.

(3) பக்தியோகம் அல்லது உபாஸனை:- ஞானியானவன் தன் கர்மங்களைச் செய்தவனாய், யாவும் பகவத் ப்ரீதிக்காகச் செய்வதாக எண்ணிப் பகவானிலேயே மனதை ஊன்றிப் பகவானை அடைகின்றான்.

"என்னிடமே மனதை வை, என்னிடம் புத்தியைப் பிரவேசிக்கச்செய், இதன்மேல் என்னிடமே வஸிப்பாய், ஸம்சயமில்லை" (பகவத்கீதை 12—8.)—என்று பகவான் பிரமாணம் செய்து கொடுத்திருப்பதைக் கவனிக்க.

## சரணாகதியே வைணவத்தின் நிச்சய முடிவு.

ஆனால் இம் மூன்று மார்க்கங்களும் கஷ்டஸாத்தியம். மேன்மையான ஜீவன்களே அவைகளை ஸாதிக்க வல்லவர்கள். திருட சித்தமில்லாதவருக்கு இம் மூன்று யோகங்களையும் அப்யஸிக்க முடியாது. இத்தகைய தௌர்பல்ய மனதையுடைய பாமர ஜனங்களுக்கு ஒரு சுலபமான மார்க்கம் ராமானுஜர் தெரிவித்திருக்கிறார். இதுதான் பிரபத்தி என்றும் சரணாகதி என்றும், அடைக்கலம் என்றும் சொல்லப்படும் மார்க்கம். கடவுள், கருணாகரர்,

தயாஸ்வரூபி அவரிடம் நம்முடைய பாபக் கிரியைகளை வெளியிட்டு அவரை ஆச்ரயித்தால், அவர் நம்மைக் காப்பாற்றுவார். நம் கர்மங்கள் தீயினிற்றூசாய் பஸ்மீகரிக்கப்படும். இம்மார்க்கத்தை அப்யஸிக்க கல்வி, புத்தி முதலியவைகள் தேவையில்லை. ஜாதி பேதங்கள் கிடையா. எந்த ஜாதி. மதம் ஆனாலும், ஆணாயினும், பெண்ணாயினும் தானாகவோ, ஒரு குருவின் போதனையாலோ, இம் மார்க்கத்தில் மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடையலாம். இந்த விதமாக கடவுள் தயாசுவரூபி, நாம் ஒரு வித்த்திலும் யோகயதையற்றவர்களாயினும் அவர் தயையால் நம்மைக் கடைத்தேற்றுவார் என்பதை பிரபத்தி சாஸ்திரமாக வற்புறுத்தினதே இராமானுஜரால் நமக்குண்டான பெரிய லாபம். இது தான் வைஷ்ணவ மதத்தின் ப்ராமுக்யம். இம்மார்க்கத்தைப் பற்றினவனுக்குத் தன் ஜீவனுடைய க்ஷேமத்தைப்பற்றின விசாரமே கிடையாது. அப் பாரத்தை பரமாத்மாவே வஹிக்கிறார். நாம் அவரை மோக்ஷத்திற்கு யாசிக்கவேண்டியதில்லை. அவர் சேஷன், நாம் சேஷி: அவர் சொத்துக்காரர் நாம் அவர் சொத்து. சொத்தை சொத்துக்காரர், அவரிஷ்டம்போல் உபயோகிக்கலாம். இந்த விதமாக வினியோகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவும் சொத்துக்கு அதிகாரமில்லை. "இதை சரணாகதிகத்யம்" என்னும் நூலில் ராமானுஜர் நன்கு விளக்கியுள்ளார். இந்தப் பிரபத்தி சாஸ்திரம் கீதை 18-ம் அத்தியாயத்தில் சர்மஸ்லோகத்தில் பொதிந்து இருக்கின்றது. "நீ எல்லா கர்மங்களையும் எனக்கு அர்ப்பணம் செய்து என்னை ஒருவனையே சரணமடைவாயாக. உன்னை எல்லா பாவங்களினின்றும் விடுவிக்கிறேன். நீ துக்கிக்க வேண்டாம்"—

பகவத்கீதை 18—66

## வைணவ சம்பிரதாய விசேஷம்

கடைசியாக, இந்த ஸ்ரீ வைஷ்ணவ மதத்தில் மற்றொரு விசேஷ முண்டு. இம் மதத்தையே ஸம்பிரதாய மென்பார்.

அதாவது, இம் மதத்தில் ஸ்ரீ அல்லது லக்ஷ்மிக்கு முக்கியதை கொடுக்கப்பட்டிருக்கிறது. லோகமாதாவின் ஸகாயமின்றி நாம் மோக்ஷமடைவது ஸாத்யமில்லை பரமாத்மா யாவருக்கும் பிதாவாயிருப்பினும் லக்ஷ்மி கடாக்ஷமின்றி மோக்ஷமண்டுதல் கூடாத காரியம். நாம் பக்தி பூர்வகமாய் மோக்ஷமடைய பிரயத்தனப்படினும் நாம் கடவுள் கருணைக்குப் பாத்திரமாயினும் தயாநிதியான கடவுள் தான் செய்த சட்டத்துக்கு (Moral law) விரோதமாக நமக்கு மோக்ஷ மெங்ஙனம் தந்தருள்வார்?

நியாயம்; சுத்த நியாய சுவரூபமான கடவுள் ஜீவன் தான் செய்த கர்ம பலன்களைத் தான் அனுபவிப்பதைத் தவிர்ப்பாரா என்று ஸந்தேக முதிக்கும் நமக்கு ஒரு வழி காட்டியுள்ளார். அதாவது, லோகமாதா வழியாக நாம் அவரைச் சரணமடைந்தால் நம் அபவாதங்களையும், பாபங்களையும் அந்த ஸ்ரீ யானவள் மன்னித்து நம் சார்பாக சுத்த நியாய ஸ்வரூபியான கடவுளிடம் மன்றாடி நம்மை அவர் தயைக்குப் பாத்திரமாகச் செய்வார், எங்ஙனம் ஒரு குடும்பத்தில் தகப்பன் தன் மக்கள் செய்யும் குற்றங்களுக்குத் தகுந்தவாறு தண்டிக்கப் போகுங்கால் தாய் அம்மக்களுக்குப் பிரிந்து கணவனிடம் மன்றாடி. அவரை அக குற்றங்களை மன்னிக்கச் செய்கிறாளோ அவ்வாறே லோகமாதா தன் மக்களாகிய ஜீவ கோடிகளுக்காக ஜாதி, வருணம், மதம், புருஷன், ஸ்திரீ என்ற பேதங்களைப் பாராட்டாமல் லோகநாதனாகிய பரப்பிரஹ்மத்தினிடம் மன்றாடி மன்னிப்புக் கேட்டு அஜ் ஜீவன்களை உஜ்ஜீவிக்கச்செய்கிறாள்.

இவ் விதமாக ராமானுஜ மதத்தில், கடவுள் பிதா, லக்ஷ்மி. லோகமாதா, ஸர்வ ஆன்ம கோடிகளும் இவ் விருவருடைய மக்கள், அக் காரணத்தினால் யாவரும் ஸகோதர ஸகோதரிகள் என்

னும் முக்கியமான கொள்கைகள் அடிப்படையாக இருப்பதே இம் மதத்தின் விசேஷம்.

என்னுயிர்தந் தனித்தவரைச் சரணம் புக்கு
யானடைவே அவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக் கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகளென்றிவரை முன்னிட்
டெம்பெருமான் திருவடிக ளடைகின்றேனே.

—வேதாந்ததேசிகர்.

# சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் நான்காவது மகாநாடு

## வரவேற்புக்கழகத் தலைவர் பேருரை

கனவான்களே! சகோதரர்களே!! சகோதரிகளே!!!

வரவேற்புக் கழகத்தின் சார்பாக நான் உங்கள் எல்லோரையும் பெரு மகழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். இங்கே குழுமியுள்ள பிரதிநிதிகள் இம்மாகாணத்திலுள்ள பல்வேறு ஜில்லாக்களிலிருந்தும் வந்திருப்பதைக் கண்டு உவப்படைகின்றேன். சென்னை நகரம் சரித்திர சம்பந்தமாக மிகச் சிறந்தது. சீரும் சிறப்பும் வாய்ந்த இச் சென்னைமா நகரம், கிறிஸ்மஸ் விடுமுறை நாட்களில் கண்ணைக் கவரும் காட்சிகளுடன் விளங்காநிற்கிறது. பீபில்ஸ் பார்க்கில் நடக்கும் வேடிக்கைகளையும், கண்காட்சி சாலைகளையும் கண்டு களிக்கும் தருணம் இதுவேயாகும். தவிர இவ்விடுமுறை நாட்களில் அநேக மகாநாடுகள் இங்கே கூடுகின்றன. இந்நகரிலுள்ள மியூஸியம், ஹைகோர்ட்டு, ஹார்பார், கோட்டை முதலானவைகள் நீங்கள் அவசியம் பார்க்கத்தக்கவை. சென்னை கடற்கரையில் மாலை வேளைகளில் உலாவித் திரிந்து, ரேடியோ பாடும் பாட்டுக்களைக் கேட்டு ஆனந்திக்க வேண்டியது அவசியம். இவைகளேயன்றி இந்நகரில் அநேக கோயில்களும், மசூதிகளும், மாதா கோயில்களும் உண்டு. இவைகளை எல்லாம் நீங்கள் ஓய்வு நேரத்தில் கண்டுகளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

வரவேற்புக் கழகத்தார் தங்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்பாடு செய்வதில் ஏதாகிலும் குற்றம் குறைகள் ஏற்படுமாயின் அவற்றை க்ஷமித்து எங்களை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நண்பர்காள்! நீங்கள் ஒவ்வொருவரும் பொருட்செலவையும் சிரமத்தையும் பாராது அவரவர் கடமையை அறிந்து இங்கு திரண்டு வந்திருப்பதைக் காண எனக்கு அளவிறந்த மகிழ்ச்சி உண்டாகிறது. இதனால் ஆரம்ப உபாத்தியாயர்கள் தங்கள் நிலைமையை உணர்ந்திருக்கிறார்களென்றும், இனி வரப்போகும் நெருக்கடியான நிலைமையை அறிந்திருக்கிறார்களென்றும் வெளிப்படையன்றோ? இம் மகாநாட்டில் கொண்டுவரப்படும் முக்கிய

விஷயங்களை நீங்கள் ஆழ்ந்து ஆலோசித்து உங்களது கடமையைச் செய்யவேண்டுமென்று கோருகிறேன்.

இம் மகாநாட்டில் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இன்னவென்பதைக் கூறாமலிருக்கமுடியவில்லை. அவைகளைச் சுருக்கமாக உங்களுக்குக் கூறுவது என் கடமையாகும். (1) ஆரம்ப பாடசாலைகளை ஒன்று சேர்த்து நடத்துதல். (Consolidation and Concentration of schools) என்ற துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கும் முறை, (2) 1920-ம் வருஷத்திய ஆரம்பக் கல்வி சட்டத்திருத்த மசோதா, (3) ஆரம்ப பள்ளிக்கூடங்களுக்குத் தற்காலம் கொடுக்கப்படும் பொருளுதவி (Grant) ஆகிய இம் மூன்று விஷயங்களைப்பற்றி உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

1930-ம் வருஷத்தில் 'ஆரம்ப பாடசாலைகளை ஒன்று சேர்த்து நடத்துதல்' என்ற முறை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இம்மாகாணத்திலுள்ள எவரும் அதனை ஆதரிக்காத காரணத்தினாலும், அதை நடத்துவதினால் ஏற்படும் கஷ்டங்களினாலும் பொருட்செலவினாலும் அது அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அம் முறைக்குச் சென்ற வருடம் புத்துயிர் துரைத்தனத்தாரால் கொடுக்கப்பட்டது. அதுமுதல் நாடெங்கும் ஒரே கிளர்ச்சியாயிருக்கிறது. திருத்தி அமைக்கப்பட்ட அம்முறையை, ஜில்லாக் கல்விச் சபைகளும் ஆசிரிய மானேஜர் சங்கங்களும், பாதிரிமார்களும், ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி மறுத்தும் கவர்ன்மெண்டார் அதை அமுலுக்குக் கொண்டுவர முயலுகின்றனர். சென்ற நூறு வருடங்களாக துரைத்தனத்தார் செய்துவரும் முயற்சியின் பயனாக இம்மாகாணத்தின் ஜன சங்கியையில் நூற்றுக்கு ஆறு பிள்ளைகளே பள்ளிக்கூடங்களுக்கு வருகின்றனர். போதுமான பாடசாலைகளை அரசாங்கத்தார் ஏற்படுத்தி கிராமப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டியது கடமையாகும். இதைச் செய்யாது அரசாங்கத்தார் தற்காலமிருக்கும் பள்ளிக்கூடங்களை அடியோடு எடுத்துவிடவும், அல்லது வகுப்புக்களை குறைக்கவும் முயலுகின்றனர்.

இந்த முறையை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதினால் ஏற்படும் கஷ்டங்கள் பத்திரிகைகள் மூலமாகவும், நேராகவும் அதி



காரிகளுக்கு எடுத்துக் காட்டப்பட்டன. அவ்வாறு எடுத்துக் காட்டப்பட்ட இடையூறுகளில் சிலவற்றைத் துரைத்தனத்தார் நீக்கிவிட முயன்றாலும், மத சம்பந்தமானதும், பாஷை சம்பந்தமானதும் ஆகிய பல கஷ்டங்கள் இருக்கின்றன. துரைத்தனத்தார் உதவி பெற்று நடந்துவரும் பள்ளிக்கூடங்களை எடுக்க வேண்டிய அவசியமிராதென்று அதிகாரிகள் இப்போது கூறினாலும், பின்னால் திறமைக் குறைவு என்ற பல குறைகள் கூறி ஆசிரிய மானேஜர்களினால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்கு ஆபத்துண்டாகலாமென்று அஞ்சவேண்டியிருக்கிறது. கிறிஸ்துவ பாடசாலைகளும், ஆசிரிய மானேஜர்களினால் நடத்தப்படும் பாடசாலைகளும், மத சம்பந்தமான கல்வியைப் போதிப்பதற்கு ஏற்பட்டவைகளாகும். பள்ளிக்கூடங்களை இவ்வாறு சேர்ப்பதால் இச்சிறந்த நோக்கம் சிதறிப்போகுமன்றோ? துரைத்தனத்தார் செலவில் மகம்மதியர்களுக்கு மத போதனை செய்ய கவர்ன்மெண்டார் முயற்சி செய்துவரும் இந்நாளில், அவர்களின் செலவில்லாமலே ஆங்காங்கே பொது ஜனங்கள் தம்தம் மத சம்பந்தமான போதனைகள் செய்வதை அதிகாரிகள் தடுத்தல் நியாயமாமோ?

மேற்கண்ட முறையில் ஏற்படும் கஷ்டங்கள் இவைகளையன்றி இன்னும் பலவுள. நம் நாட்டில் ஆரம்பக்கல்விப் பரவுவதை தடுக்க இம் முறை சாதனமாயிருக்கிறது. பெண்கல்வி பரவுவதற்கு அது ஒரு முட்டுக்கட்டையாகும். நம் நாட்டில் கிராமங்கள் மிகவும் சிறியவைகளாயிருப்பதால் பல இடங்களில் பெண்களும் பிள்ளைகளும் ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டிவரும். பள்ளிக்கூடங்கள் அருகிலிருக்கும்போதே பெற்றோர் தம் பெண்களை அனுப்புவதில்லை. அரைமைல் அல்லது ஒரு மைல் தூரத்திலுள்ள பள்ளிக்கூடங்களுக்குப் பெண்களைப் பெற்றோர்கள் அனுப்பமாட்டார்களென்பது திண்ணமல்லவா. இதனால் நமது மகாணத்தில் ஆரம்பக் கல்விக்கே அழிவு ஏற்படுமென்று தெரிகிறது. மேலும் உயர்ந்த வகுப்புக்களையுடைய பள்ளிக்கூடங்களை முதல் இரண்டு மூன்று வகுப்புக்களுள்ள பள்ளிக்கூடங்களாக குறைப்பதினாலும் கெடுதலையே விளைவிக்கும். உயர்ந்த வகுப்புக்களுள்ள பாடசாலைகள் அருகில் இருக்கும்போதே, அநேக பிள்ளைகள் ஐந்தாவது வகுப்பு வரைபடிக்காமல் விட்டுவிடுகின்றனர். அருகில் உள்ள பள்ளிக்

கூடங்களில் இரண்டு மூன்று வகுப்புவரையில் இருக்குமாயின்
அநேகர் மூன்றும் வகுப்புடன் விட்டுவிடுகிறார்கள்.

இவ்விஷயத்தை அதிகமாக விரித்துக் கூறுவதை நிறுத்தி,
இது நம் நாட்டிற்குப் பொருந்தியதல்லவென்றும், அநுஷ்டானத்
திற்குக் கொண்டுவரமுடியாதென்றும், அதிக செலவுள்ளதென்றும்
நம் நாட்டிற்குத் தீங்கிழைக்கக்கூடியதென்றும், சுருக்கமாகக் கூறு
கின்றேன். இந்த முறையால் நம் நாட்டு ஜனங்களுக்கும், பள்ளிக்
கூட நிர்வாகத்தில் அதிகப் பொருளைச் செலவழித்து நடத்திவரும்
மானேஜர்களுக்கும், ஆரம்ப ஆசிரிய மானேஜர்களுக்கும், தீங்கு
நேரிடுமென்பது திண்ணம். துரைத்தனத்தார் உறுதி கொடுத்திரு
ந்தபோதிலும் ஆசிரிய மானேஜர்களால் நடத்தப்படும் பள்ளிக்
கூடங்களுக்குத் தீமை ஏற்படுமென்பது நிச்சயம். ஆதலால் நாம்
எல்லோரும் பொதுஜனங்களுக்கு இந்த ஏற்பாட்டைச் செய்
வதால் உண்டாகும் கெடுதல்களை எடுத்துரைத்து, இதனைத்
துரைத்தனத்தார் அமுலுக்குக் கொண்டுவராதபடிச் செய்யவேண்
டும். அதோடு பொருளுதவி பாடசாலைகளிலுள்ள உயர்ந்த வகுப்
புக்களைத்திறமைக்குறைவு என்றகாரணங்கூறி எடுப்பதில்லையென்று
வாக்குறுதி செய்யும்படி அதிகாரிகளைக்கேட்டுக்கொள்ளவேண்டும்.

'திறமை' யென்பதைக் குறித்து நான் சில விஷயங்கள் கூற
விரும்புகிறேன். திறமை என்பது அநேக விஷயங்களைப் பொறுத்த
தாகும். திறமையைக் கவனிக்கும்போது அவ்விஷயங்களெல்லா
வற்றையும் அவசியம் கவனிக்கவேண்டும். உபாத்தியாயர்கள்
கருத்துடனும் திறமையுடனும் போதிக்கிறார்கள் என்பதும் பள்ளி
கூடத்தின் பொருளாதார நிலையும், மேலதிகாரிகளின் நன் மதிப்பும்
முக்கியமானவை. உபாத்தியாயர்கள் கருத்துடனும் திறமையுட
னும் போதிக்காமலிருக்கமுடியாது. ஏனெனில் அவர்கள் பெற்
றோர்களைத் திருப்தி செய்யாமல் அவர்கள் வாழ முடியாதன்றோ?
மற்றப்பள்ளிக்கூடங்களைப்போலல்லாமல், ஆரம்ப ஆசிரிய மானேஜர்
களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில், ஆரம்ப ஆசிரிய மானே
ஜரே கட்டடம், சாமான் முதலியவற்றிற்கு பொருள் செலவு
செய்து நடத்தவேண்டியிருக்கிறது. இதற்கு அவர்கள் அதிகாரிக
ளிடமிருந்து பெறும் உதவி மிகவும் சொற்பமாகும். அதுவும்
குறையாமல் கிடைக்குமென்ற நிச்சயமும் இல்லை. மூன்றாவ



தாக, மேலதிகாரிகளிடமிருந்துக் கிடைக்கும் நன்மதிப்பும்
உதவியும் மிகக் குறைவேயாகும். இதை எடுத்துக்கூறாமலிருக்க
முடியவில்லையென்று வருந்துகிறேன். தற்காலத்தில் நடந்து வரும்
பரீட்சை (Inspection) முறையை அடியோடு மாற்றி அமைக்க
வேண்டும். இன்ஸ்பெக்டர்கள் குற்றங் குறைகளைக் கண்டு பிடிப்
பதையே தமது தொழிலாகக் கொள்ளாமல், அக்குறைகளை நீக்
கும் வழிகளை உபாத்தியாயர்களுக்குக் காட்டி, அவர்களுக்கு வழி
காட்டியாகவும் துணைவராகவும் இருத்தல்வேண்டும். இக்குறைகளி
னிடையே, ஆரம்ப ஆசிரிய மானேஜர்களால் நடத்தப்படும்
பள்ளிக்கூடங்கள் மற்ற பள்ளிக்கூடங்களைவிட, எவ்விதத்திலும்
தாழ்ந்துவிடவில்லை. நம் பள்ளிக்கூடங்களுக்குப் பொருளுதவியும்,
மேலதிகாரிகளின் உதவியும் போதுமான அளவு இருக்குமாயின்
அவை மற்றப் பள்ளிக்கூடங்களைவிட சிறந்து விளங்கு மென்ப
தற்கு ஐயமுண்டோ?

அடுத்தபடி, 1920-ம் வருஷத்திய சென்னை ஆரம்பக்கல்வி
மசோதாவை எடுத்துக்கொள்வோம். அது அமுலுக்கு வந்தது
முதல் அநேக விஷயங்களில் குறையுள்ளதென்பதை யுணர்ந்து
அதிகாரிகள் அதை மாற்றி அமைக்க பல மசோதாக்களைக் கொண்டு
வந்தும் ஒருவித பலனும் இதுகாறும் ஏற்படவில்லை. இப்போது
கொண்டுவந்திருக்கும் மசோதாவைக் கவனித்தால் நமது மகாணத்
தில் கல்வி சீர்திருத்தம் எவ்வளவு ஒழுங்கீனமாய் நடக்கிறதென்று
தெரியவரும். அந்த மசோதாவில் கல்வி சீர்திருத்தத்திற்கு
வேண்டிய முக்கியமான விஷயங்கள் கவனிக்கப்படவே யில்லை.
அதில் கூறப்படும் முக்கிய விஷயங்களில், கட்டாயப் படிப்பை ஆங்
காங்கு அமுலுக்குக் கொண்டுவருவதற்குக் கல்வி இலாகா தலை
வருக்கு (Director of Public Instruction) கொடுக்கப்பட்ட சில
அதிகாரங்களும், ஜில்லா கல்விச் சபைகளில் நிறைவேறிய தீர்
மானங்களை அப்பீலில்லாமல் ரத்துசெய்யவும், மாற்றவும், அத் தலை
வருக்கு கொடுக்கப்படும் அதிகாரங்களும் முக்கியமாய் கவனிக்கத்
தக்கவை. இம்மசோதாவில் முதலில் கண்ட சில விஷயங்களைத்
தவிர மற்றவைகள் கல்வி அபிவிருத்திக்கு ஏற்றதல்ல. இக்காரணத்
தால் பலர் இதை அங்கீகரிக்கவில்லை, செலக்ட் கமிட்டியார், இந்த
மசோதாவில் சிற்சில சாரம்சங்களை ஜில்லாக் கல்விச் சபை பிரதி

டென்டு, வைஸ் பிரஸிடென்ட் முதலான அதிகாரிகளுக்குச் சாதகமாய் மாற்றினார்களே யன்றி முக்கிய விஷயங்களைச் சிறிதும் கவனிக்கவில்லை: கல்வி இலாகா தலைமை அதிகாரிக்கு, அப்பீலில்லாமல், ஜில்லா கல்வி சபைகளில் நிறைவேறிய தீர்மானங்களை ரத்து செய்யவும் மாற்றவும் அதிகாரம் கொடுப்பது, ஷெடி நோக்கத்திற்கே மாறானதாகும். இதனால் கல்வி இலாகாவிற்கும் அதிகாரிகளுக்கும் ஜில்லா கல்வி சபைகள் அடங்கியே நடக்கவேண்டுமென்பது வெளியாகிறது. எல்லோருக்கும் கல்வி கற்பிக்கவேண்டுமானால் கட்டாயப் படிப்பு அவசியமாகும். சிலரைக் கட்டாயப் படுத்தாமல் விட்டுவிடலாம் என்பதினால் எல்லோருக்கும் கல்வி கற்பிப்பதெங்ஙனம். தற்கால முறைப்படி பள்ளிக்கூடத்திற்கு வாராத பிள்ளைகளைக் கொண்டுவரவும், பள்ளிக்கு வரும் பிள்ளைகளை ஐந்து வகுப்பு வரையில் நிறுத்திவைப்பதும் அவசியமாகின்றன. புது முறை இதைவிட எவ்வகையில் மேன்மையானதென்று விளங்கவில்லை. அட்டென்டன்ஸ் கமிட்டியாரால் பிராசிகியூஷன் செய்யத் தயங்கினால், அவர்கள் நிலையிலுள்ள முனிஸிபல் சேர்மன்களும், டிஸ்டிரிக்ட் போர்ட்டு பிரஸிடென்டுகளும் பிராசிகியூஷன் செய்ய முன் வருவார்களா? மாஜிஸ்ட்ரேட்டுகள் தகுந்த தண்டனை விதிக்காவிடில், உத்தியோகஸ்தரல்லாத பிரஸிடென்டுகள் எவ்வாறு தண்டனை விதிக்கமுடியும்: இந்த அதிகாரத்தினால் ஒருவித நன்மையும் ஏற்படாமற் போனாலும், பிரஸிடென்டுகள் தம் சுய நலத்திற்காக வேறு வகையில் இதை உபயோகிக்கலாமல்லவா? பிள்ளைகள் ஒழுங்காகப் பள்ளிக்கூடங்களுக்கு வருகிறார்களா வென்றும் தனிக்கை செய்யவும், வாராதவர்களுடைய பெயரைக் குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் ஒருவித வழியும் கூறப்படவில்லை. இத்தகைய முறைகளினால் அதிகார வர்க்கத்தினர் கல்வி அபிவிருத்தியைச் சீர்குலையச்செய்து, சுயஸ்தலஸ்தாபனங்களைப் பலனற்றதாகச் செய்ய இடமுண்டு. ஆதலால் இம்மசோதாவைக் கண்டித்துப் பலமாகப் பொதுஜனங்களைக் கண்விழிக்கச் செய்து, கல்வி இலாகா மந்திரி அதைச் சட்டமாக்குவதைத் தடுக்கவேண்டும்.

செலக்ட் கமிட்டி சிபார்சுகளில் கவனிக்கத்தக்க விஷயம் ஒன்றுண்டு. அக்கமிட்டியார் ஆரம்ப கல்விக்காகக் கொடுக்கப்படும்



பணம் மிகவும் குறைவென்றும் அதிகப்படுத்த வேண்டுமென்றும் கூறியுள்ளார்கள். உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கும் டீச்சிங் கிராண்ட் அநேக வருடங்களுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டது. மற்ற பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவாயிருக்கிறதென்பதை யுணர்ந்து, அதிகாரிகள் ஒரு புதிய ஸ்கேல்படி சம்பளம் கொடுக்கவேண்டுமென்று உத்திரவிட்டிருப்பதைக்கண்டு களிக்கின்றோம். ஆனால் அதே ஸ்கேல்படி பொருளுதவிபெற்று நடக்கும் பாடசாலைகளில் வேலைசெய்யவும், உபாத்தியார்களுக்கு கிராண்டை உயர்த்தாததைக் கண்டு பெரிதும் வருந்துகின்றோம். ஆரம்ப ஆசிரிய மானேஜர்களும் மற்ற பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் சம்பளத்தைத் தாமே எடுத்துக்கொள்ளுகிறார்கள்; ஆரம்ப ஆசிரிய மானேஜர்களே கட்டடத்திற்கும், சாமான்களுக்கும், உபகரணங்களுக்கும் இப்பணத்தைச் செலவிடவேண்டியிருக்கிறது. மற்ற பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களின் சம்பளம் ரூபா 15; ரூபா 15-20 ரூபா 20-30 ரூபா 25-45 ஆக இருக்கும்போது, டீச்சர் மானேஜர்களுக்குக் கொடுக்கப்படும் கிராண்டோ ரூபா 5, ரூபா 12, ரூபா 16-10-8 ஆக இருக்கிறது. இதைத் தவிர மற்ற பாடசாலைகளில் உபாத்தியாயினிகட்கு அதிகச் சம்பளமிருக்க, ஆசிரியர் மானேஜர் பாடசாலையிலுள்ள உபாத்தியாயினிகட்கு அதிக கிராண்டு கிடையாது. ஆகையால் பண உதவிசெய்யும் விஷயத்தில் அதிக சிக்கனமாயிருந்து ஆரம்ப ஆசிரிய மானேஜர்களால் நடத்தப்படும் பாடசாலைகள் திறமைக் குறைவானதென்று குறைகூறுவது நியாயமாகாது. ஆகையால் நாம் ஆரம்ப ஆசிரிய மானேஜர்கள் தகுதியான உபாத்தியாயர்களைவைத்து, பாடசாலையை ஒழுங்காக நடத்துவதற்கு கிரான்ட் விகிதத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும். நம் பாடசாலைகளிலுள்ள உபாத்தியாயினிகட்கும் கிரான்டு விகிதம் அதிகப்படுத்தவேண்டுமென்றும் கேட்கவேண்டும். மேலும் அதிக செலவு பிடிக்கும் இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு அதிக கிராண்டு கொடுக்கவேண்டுமென்றும் கேட்கவேண்டும்.

சகோதரர்களே! நான் முதலில் கூறியபடி நமக்கு வரப்

சேர்ந்து உழைத்தாலன்றி, நம்மெதிரில் தோன்றும் கஷ்டங்களை எதிர்த்து ஜெயமடைய முடியாதென்பது திண்ணம். நாம் தொன்றுதொட்டு இந்நாட்டில் பாடசாலை வைத்து நடத்தி வருகிறோம். நாம் ஒன்று சேர்ந்து உழைக்காததால் பல நஷ்டங்களுக்குள்ளானோம். சென்ற ஐந்து வருடங்களாக நமக்குக் கணக்குப்படி கிடைக்கவேண்டிய கிரான்டுத் தொகைக்கு குறைவாகவே கிடைத்து வருகிறது. அநேக ஆரம்ப ஆசிரிய மானேஜர் பாடசாலைகள் எடுக்கப்பட்டன. இனியும் நாம் சும்மா இருந்தால் நம் பாடசாலைகள் இருப்பதே கஷ்டமாய்விடும். ஆகையால் நாம் இப்போதாகிலும் விழித்து, புத்துணர்ச்சியுடன் உழைத்து நமது அந்தஸ்தையும் பொருளாதார நிலையையும் உயர்த்திக்கொள்ள பாடுபடவேண்டும்.

ஒவ்வொரு தாலுக்காவில் ஒரு ஆரம்ப ஆசிரிய மானேஜர் சங்கம் நிறுவப்படவேண்டும். அவைகள் பல ஒன்று சோந்து ஜில்லா சங்கங்களாயும், ஜில்லா சங்கங்கள் ஒன்று சேர்ந்து மாகாண சங்கமாகவும் நிறுவப்படவேண்டும். இச்சங்கம் எல்லா ஆரம்ப ஆசிரிய மானேஜர்களின் நன்மைக்காக ஒரு வழிபட்டு ஒத்துழைக்கவேண்டும். அப்போதுதான் நமது பள்ளிக்கூடங்கள் நல்ல முறையில் சிறந்து விளங்கும். இதுவே உங்களைக் கடைசி முறையாகக் கேட்டுக்கொள்வது. ஒன்று சேருங்கள்! ஒத்துழையுங்கள்.!!

“ஒன்று பட்டாலுண்டு வாழ்வு”

வறவேற்பு கமிட்டி தலைவருகிய என் கடமை இதோடு முடிவடைகின்றது. உங்கள் சார்பாக ‘நமது மகாநாட்டுத் தலைவரை பேருரை நிகழ்த்தும்படி அவரை வேண்டிக்கொள்ளுகின்றேன். நமது மகாநாட்டுத்தலைவர் ஆரம்பக் கல்வியில் சிறந்த அனுபோகமுள்ளவரென்பதும், நமக்காகவே பல முறைகளிலும் பாடுபட்டு உழைப்பவரென்பதும், நமது நாட்டின் முன்னேற்றத்தைக் குறித்து பல வகையிலும் பாடுபட்டு உழைப்பவரென்பது நீங்களெல்லோரும் நன்கு அறிந்ததே. அத்தகைய பெரியார் நமக்குத் தலைவராக இருந்து நாம் மேற்கொண்ட காரியங்களை நடத்திக் கொடுக்கும்படி நான் அவரைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

190339


# Venkatrama & Co.

Printers, Publishers, Book-sellers, Etc.

## வெங்கடராம நீதிகதா வாசகம்

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் பாகம் | ... | ... | 0—1—6 |
| மூன்றாம் பாகம் | ... | ... | 0—1—6 |
| நான்காம் பாகம் | .. | ... | 0—1—6 |
| சித்ரபால சிக்ஷை | ... | ... | 0—3—0 |

## வெங்கடராம தமிழ் வாசகம்

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் | வகுப்பு | ... | ... | 0—2—0 |
| இரண்டாம் | ,, | ... | ... | 0—3—0 |
| மூன்றாம் | ,, | ... | ... | 0—3—6 |
| நான்காம் | ,, | ... | ... | 0—4—0 |
| ஐந்தாம் | ,, | ... | .. | 0—4—6 |

## POETICAL SELECTIONS

(Approved by the Text Book-Committee)

| | | |
|---|---|---|
| FIRST BOOK | For I Form | 0—3—0 |
| SECOND ,, | II ,, | 0—3—0 |
| THIRD ,, | III ,, | 0—4—0 |
| VENKATARAM'S Ist Primer | | 0—2—0 |

286, சைனுபஜார் ரோட்,
(அப்பா கட்டிடம் மேல்மாடி)
ஜி. டி. மதராஸ்.

## 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

40 மாத்திரைகள் அடங்கிய



# மதனமஞ்சரி

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

டப்பி 1-க்கு ரூபா 1.

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்.

**இனம்!** **வைத்திய வித்தியா** **இனம்!!**

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் செலவு இல்லாமல் அனுப்பப்படும்.

**மதன மஞ்சரி பார்மஸி, 1-94, சைனா பஜார் ரோட், மதராஸ்.**


## எமது இனிய தமிழ் பிரசுரங்கள்

[ஆக்கியோர் : மணி திருநாவுக்கரசு முதலியார்]

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | | | | .... | 0 | 2 | 6 |
| இரண்டாம் ,, .... | 0 | 3 | 0 | மூன்றும் ,, .... | 0 | 4 | 6 |
| நான்காம் ,, .... | 0 | 5 | 6 | ஐந்தாம் ,, .... | 0 | 6 | 6 |

### பொற்காலக் கணிதம்

[டி. எஸ். இராகவையர்]

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | 0 | 5 | 0 | மூன்றும் புத்தகம் | 0 | 8 | 0 |
| இரண்டாம் ,, | 0 | 6 | 0 | நான்காம் ,, | 0 | 9 | 0 |

### இந்திய சரித்திர தீபம்

[சி. வி. நாராயண அய்யர், எம். ஏ., எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 5-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 6-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |

### சமூக வாசகம்

[ஆர். இராமையர், எம். ஏ., எல். டி.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5-ம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 5 | 0 |

### நவீன சுகாதார வாசகங்கள்

[கே. இராஜம் அய்யங்கார், பி. ஏ., எல். டி., எம் எ, ஐ. எஸ்.]

| | | | |
|---|---|---|---|
| 4-ம் வகுப்பு இரண்டாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| 5 ம் வகுப்பு மூன்றும் புத்தகம் | 0 | 5 | 0 |

### அறநெறி விள்க்கம்

(மணி. திருநாவுக்கரசு முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4-ஆம் வகுப்பு முதற் புத்தகம் | 0 | 5 | 0 |
| 5-ஆம் ,, இரண்டாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| 6-ஆம் ,, மூன்றும் புத்தகம் | 0 | 7 | 0 |

### ஒழுக்கத்தால் உயர்ந்தோர்

(மணி. திருஞானசம்மந்த முதலியார்)

| | | | |
|---|---|---|---|
| 4, 5-ஆம் வகுப்பு திருக்குறிப்புத் தொண்டர் | 0 | 2 | 0 |
| ,, அதிபத்த நாயனார் | 0 | 2 | 0 |
| ,, ஏனாதிநாத நாயனார் | 0 | 3 | 0 |
| ,, கந்தனார் | 0 | 5 | 0 |

**கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,**

16. சம்புதாஸ் தெரு, ஜி. டி. மதராஸ்.

# ஆப்த நண்பன்

நீங்கள் அறியாமையினால் தேக சுகத்தைக் கெடுத்துக் கொண்டு அல்லல்படும் சமயத்தில் உங்களுக்கு ஆப்த நண்பனாக உதவும் எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

## ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களை உபயோகித்தீர்களா? இல்லையென்றால் உடனே உபயோகித்து தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, பசியின்மை, ஞாபகக் குறைவு, தாதுபுஷ்டியின்மை முதலிய வியாதிகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுங்கள். 32 மாத்திரைகள் அடங்கிய டப்பி ஒன்றுக்கு ரூபா 1-0-0.

இனாம்! காம சாஸ்திரம் இனாம்!!

விலாசத்தை தெரிவியுங்கள்.

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**

**26, பிராட்வே, மதராஸ்.**


## எமது தமிழ்ப் பிரசுரங்கள்

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. ஏ. எல். டி. இயற்றியவை.

### கலைமகள் வாசகங்கள்

வி. வீரராகவன், எம். ஏ. இயற்றியவை.

கலைமகள் வாசகம் முதல் வகுப்பு 0 2 0
இரண்டாம் வகுப்பு 0 3 0 நான்காம் வகுப்பு 0 5 0
மூன்றாம் வகுப்பு 0 4 0 ஐந்தாம்வகுப்பு 0 6 0

### கலைமகள் கதாவாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் விலை .... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் விலை .... | 0 | 3 | 0 |

### கலைமகள் கணித நூல்

எஸ். தருமலிங்க நாய்க்கர்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணா | 0 | 5 | 0 |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, | 0 | 6 | 0 |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, | 0 | 8 | 0 |
| 4-வது புத்தகம் (5வது வகுப்பு ,, | 0 | 9 | 0 |

### நீதிக்கட்டுரைக் கோவை

வி. ஞானதிக்கம், பி. ஏ. எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் அணா .... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, .... | 0 | 7 | 0 |
| கலைமகள் நீதிக்கதைகள் ,, .... | 0 | 4 | 0 |

### இந்து தேச சித்திர சரித்திர கதைகள்

டி. ஆர். ரங்கசாமி ஐயங்கார் எம். ஏ., எல். டி.

| | | | |
|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை அணா .... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, .... | 0 | 5 | 0 |

எஸ் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி. ஏ., எல். டி. எம். ஆர். ஏ. எஸ்

| | | | |
|---|---|---|---|
| வட ஆற்காடு பூகோளம் அணா .... | 0 | 4 | 0 |
| செங்கற்பட்டு பூகோளம் ,, .... | 0 | 5 | 0 |

### பாலர் கணிதம்

எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். ஏ. எல். டி.

முதற் புத்தகம் விலை 0 5 0 இரண்டாம் புத்தகம் 0 7 0
மூன்றாம் புத்தகம் 0 6 0 நான்காம் புத்தகம் 0 8 0
ஐந்தாம் புத்தகம் 0 9 0

**எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.**

நெ. 2, சகின் லேன் பீச்சு ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்

---

**1. "கக்வா"** க்ஷக்துவானுக்கு மிக்வும் கைக்கண்டது; ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப்பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். .... புட்டி ரூ 1
3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ் இனாம்

**2. க்லோரோசாலினால்** இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதே கிடையாது; அபூர்வமான மருந்து 30—35 வருஷ அனுபவம். வாந்தி, காலரா' பேதி, வயிற்றுநோய், இவைகளை விரைவில் நீங்கும்.
புட்டி ரூ. 1—4—0

**3. என்னாத் தைலம்.** ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகல விதகண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உருப்புக்களிலுள்ள மேகச்சூடு நீங்கும்.
புட்டி விலை ரூபா 1 4 0

**4. நியூரல் தைலம்.** ஒற்றைத்தலைவலி முதல் சகலவிதமான தலைவலிகளையும் நீக்கும். 25 வருஷ அனுபோகமுள்ளது. புட்டி ரூ. 1—4—0 தபால் செலவு வேறு.

**மருந்து காட்லாக் இனாம்.**

வாத்திமார்களுக்கும் வைத்தியர்களுக்குமாத்திரம் ரூ 5, மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ 1 தள்ளி கொடுக்கப்படும்.

**ஆஸ்தமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு**

கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

DR. H. **தேவதாசர்** B. A. L. T. M. T. Sc.,
**தாசர் சித்த வைத்தியசாலை,**
**தின்னனூர், ஆர். எஸ்.**



# எமது தமிழ் நூல்கள்

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை)

எமது கோபால் புதிய தமிழ் வாசக புஸ்தகம் 1-5, சென்னை, மைசூர், திருவாங்கூர், சிலோன், பர்மா, துரைத்தனத்தார் அங்கிகாரம் செய்து ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களில் வைத்து நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நீங்கள் இது வரையிலும் பார்த்திராவிட்டால் உடனே எழுதவும்.

| எம். எஸ். இராகவன் பி. ஏ., எல். டி., எழுதியவை. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் | 0 | 2 | 6 |
| ,, ,, இரண்டாம் ,, | 0 | 3 | 0 |
| ,, ,, மூன்றாம் ,, | 0 | 4 | 0 |
| ,, ,, நான்காம் ,, | 0 | 4 | 6 |
| ,, ,, ஐந்தாம் ,, | 0 | 6 | 0 |
| புதிய புஸ்தகங்கள் வித்வான் எம். வி. வேணுகோபால் பிள்ளை, | | | |
| கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 6 .... | 0 | 7 | 0 |
| ,, ,, நெ. 7 .... | 0 | 8 | 0 |
| ,, ,, நெ. 8 ... | 0 | 9 | 0 |
| உலக அதிசயங்கள் புஸ்தகம் 1. சி. கார்டன் முகவுரையுடன் | 0 | 3 | 0 |
| ,, ,, 2. ,, ,, | 0 | 4 | 0 |
| ,, ,, 3. ,, ,, | 0 | 5 | 0 |
| தினசரி கணக்கு புஸ்தகம் 1. எஸ். ஜெகந்நாதன் | 0 | 4 | 0 |
| ,, ,, 2. ,, | 0 | 5 | 0 |
| ,, ,, 3. ,, | 0 | 5 | 0 |
| சென்னை ராஜதானி பூகோளம்—இ. வி. கோபாலய்யர் | 0 | 6 | 0 |
| சுகாதார விளக்கம் 4, 5-வது வகுப்புகளுக்கு உரியது (இ. வி. கோபால அய்யர் டிப்டி இன்ஸ்பெக்டர்) | 0 | 5 | 0 |
| சிறுமணிக் கதைகள் — எஸ். எஸ். அருணகிரி நாதர் | 0 | 5 | 0 |
| கம்பர் அல்லது கவியரசு-பண்டிதர் ஆ. நா. கன்னையா | 0 | 5 | 0 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினா விடை — பண்டிதர் கா. ரா. கோவிந்த ராஜ முதலியார் .... .... | 0 | 4 | 0 |
| சிறுவர் இந்துதேச சரித்திரம் — வி. ஜயராம் அய்யர் (பி. ஏ., பி. எல்.,) ... .... .... .... | 0 | 5 | 0 |
| ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் — முதற் புத்தகம், எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. ஏ. எல். டி. | 0 | 5 | 0 |

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி,**
புஸ்தக வியாபாரிகள், ஜார்ஜ் டவுன், சென்னை.

# லக்ஷ்மீ நாராயண தைலம்

## உள்ளுக்கும் மேலுக்கும் நிர்ப்பயமாய் உபயோகப்படுத்தும் ஓர் பரம ஔஷதம்

வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் மூவகைத் தோஷங்களின் ஏற்றக் குறைச்சலினால் ஏற்படும் அனேக வியாதிகளுக்கும், உள்ளுக்கும், வெளிக்கும் உபயோகமாகும் தேவாமிர்தம் போன்ற ஓர் பரம ஔஷதம். மனிதர்களுக்குச் சிரசுமுதல் பாதம் வரையில் ஏற்படும் சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே ஔஷதம் போதுமானது. பாலர், யௌவனர், விருத்தர் முதலிய ஸ்திரீ புருஷர்கள் எல்லோருக்கும், உண்டாகும் எப்படிப்பட்ட வியாதிகளுக்கும் உள்ளுக்கும் மேலுக்கும் நிர்ப்பயமாய் உபயோகித்து நிமிஷத்தில் குணமடையலாம். இதற்கு விசேஷ பத்தியமாவது, அனுபானமாவது கிடையாது. இந்த ஔஷதத்தைத் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணமடையலாம். ஆபத்தான வியாதிகளுக்கு உபயோகிக்க அந்த க்ஷணத்திலேயே மந்திர சக்தியைப்போல் குணங்காணலாம். இம்மருந்து எந்த வீட்டில் இருக்கிறதோ, அந்த வீட்டில் சித்த வைத்தியர் ஒருவர் இருப்பதாக நினைத்துத் தைரியமாயிருக்கலாம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—சகல சுரங்கள், பிளேக், பேதி, காலரா, தலைப்பாரம், தலைவலி, தலை சுற்றல், ஜலதோஷம், மார்சளி, இருமல், தொண்டைக்கம்மல், சுவாஸகாஸம், அஜீர்ணம், புளியேப்பம், மந்தம், வயிற்றுப் போக்கு, வயிற்றுப்பிசம், வயிற்று இரைச்சல், ஜன்னி, சீதளம், பித்தமயக்கம், கைகால் பிடிப்பு, பார்ஸவாய்வு, அண்டவாய்வு, குத்தல், குடைச்சல், வாதரோகம், குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், ஜன்னி இழுப்பு, கக்குவாய் இருமல், ஸ்திரீகளுக்கு உண்டாகும் சூதகவாய்வு, சூதக ஜன்னி முதலியவைகளும் இன்னும் அனேக வியாதிகளும். இம்மருந்தின் முழுக்குணங்களையும் விவரிக்க இடம் போதாததால் சுருக்கமாய்த் தெரிவித்திருக்கிறோம்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1—12—0

விலாசம்:—மலையாள வைத்திய நிலையம்,
தபால் பெட்டி நெம்பர் 53. மதராஸ்.

## கையில் வெண்ணெயிருக்க நெய்யிக்கு ஏன் கவலைப்படவேண்டும்?

### இதோ
### ஸ்திரீகளுக்கு ஓர் வரப்ரசாதனி

# அபலா ரக்ஷணி

### உத்தம புருஷர்களின் கடமைகள் என்ன?



ஸ்திரீகள் மாதா மாதம் கிரமந்தப்பாமல் மாதவிடாய் ஆகிவருகின்றனரா வென்பதையே மிக முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். இதைக் கவனிக்காவிடில், பலவித ரோகங்கள் உண்டாகி, வீட்டு விலக்கம் தவறி, நெடுநாள் கர்ப்பந்தரிக்காமலேயே சரீரம் ஸ்தூலித்து, மாதவிடாய் காலத்தில் வயிற்றுவலி பொறுக்க முடியாமல், ஐயோ, ஆ வென்று கதறி தரையில் விழுந்து புழுத் துடிப்பதுபோல் துடித்துப் புரண்டு அழுவார்கள். அப்படிப்பட்ட ஸ்திரீகளுக்கு எம்முடைய "அபலா ரக்ஷணி" என்ற திவ்விய ஔஷதத்தை வீட்டு விலக்கம் வருவதற்கு முன்னமே வரவழைத்து உபயோகிக்க கர்ப்பாசயத்தைச் சார்ந்த ரோகங்களை குணப்படுத்தி மறுதூரத்தில் சற்புத்திர சந்தானம் உண்டாகச் செய்யுமென்பதை நிச்சயித்துக் கூறுகின்றோம்.

விலை செட் 1-க்கு ரூபா 3—8—0

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்
மலையாள வைத்திய நிலையம் தபால் பெட்டி நெ. 53. மதராஸ்.

ரிஜிஸ்டர் நெ. 2912

# ஜீவாம்ருதம்

## ப ல ஹீ ன ம்

அல்லது .

## நரம்புத் தளர்ச்சிக்கு ::
## :: கைகண்ட ஔஷதம்




உங்களுக்கு வேலை அதிகமாயிருக்கிறது. ஆயினும் வேலைசெய்ய முடியவில்லை. காரணம் பலக் குறைவு. சரீரம் சோர்வடைகிறது. உலக இன்பங்களில் இடுபட முடிகிறதில்லை. வயது அதிகம் ஆகவில்லை. ஆனால் வயதிற்குத் தக்க சுறு சுறுப்பும் ஜீவ சக்தியும் இல்லாமல் ஏக்கங் கொள்ள வேண்டியதா யிருக்கிறதல்லவா? இந்த மனோ சஞ்சலத்தை ஒரு பாட்டில் ஜீவாமிருதத்தைக் கொண்டு தகர்த்தெறியுங்கள். ஜீவாமிருதத்தை உட்கொண்டவர்கள் கவலையின்றி சுகமாக வாழ்கிருர்கள். வாழ்வின் பூர்ண பலன் அனுபவிக்க ஜீவாமிருதத்தை விட உயர்ந்த நண்பன் வேறுகிடையாது.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

" தயாரிப்பவர்கள் :— " ஆயுர்வேதாஸ்ரமம் " தபால்பெட்டி நெ. 287, மதராஸ்.

பி. வீரராகவன் அவர்களால், சென்னை, மண்ணடி, புதுத்தெரு, நெ. 94'95, இல்லத்தில் " அசோஸியேஷன் " அச்சுக்கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.